


34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நதி: 34 பாலம்: 08 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 15, 2024

# வரவு–செலவுத் திட்டத்திற்கு முன்னான அரசின் அறிவிப்புகள்

கனடிய மத்திய அரசின் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் 2024 ஏப்பிரல் 16ஆம் திகதி கனடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இதுவரை காலமும் மத்திய அரசாங்கம் வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போதுதான் அந்த நிதியாண்டில் திட்டமிடப்பட்டுள்ள செலவினங்களைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும்.

இம்முறை இதற்கு விதிவிலக்காக வரவு-செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முந்தைய இரண்டு வாரங்களிலும் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவும் அவரது அமைச்சர்களும் நாடு முழுவதும் பிரயாணம் செய்து வரும் நிதி யாண்டில் திட்டமிடப்பட்டுள்ள ஒவ்வொரு செலவினங்களையும் ஒவ்வோர் இடத்திலும் ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டித் தெரிவித்துக்கொண்டு வருகின்றனர்.

துணைப்பிரதமரும் நிதியமைச்சருதமான கிறிஸ்டியா ஃப்ரீலண்ட் (Christia Freeland) ஏப்பிரல் 11ஆம் திகதி ரொறொன்ரோவில் ஊடகவியலாளர் மாநாட்டில் வீடு/ஆதனம் வாங்கு வோருக்கு வசதியளிக்கும் பல நடவடிக்கைகளை அறிவித்தார். இந்நட வடிக்கைகள் முதற்தரமாக ஆதனம் வாங்குவோருக்கும், ஏற்கனவே ஆதன உரிமையாளர்களாக இருப்போருக்கும் அடமான வசதிகளைப் பெறவும் உதவும்.

ஏப்பிரல் 16ஆம் திகதியில் இருந்து முதன் முறையாக ஆதனம் வாங்குவோர் தமது ஓய்வூதிய சேமிப்புத் திட்டத்தில் (RRSP - Registered Retirement Savings Plan) சேமித்துள்ள பணத்தில் இருந்து $60,000வரை மீளப்பெற்று முதல் வீடு வாங்கப் பாவிக்கலாம். இவ்வாறு ஓய்வூதிய சேமிப்புத் திட்டத்தில் இருந்து மீளப்பெறக் கூடிய தொகை இதுவரை காலமும் $35,000ஆக இருந்தது.


Deputy Prime Minister & Minister of Finance Chrystia Freeland

இவ்வாறு RRSPயில் இருந்து மீளப்பெறும் பணம் திரும்பவும் ஓய்வூதிய சேமிப்புத் திட்டத்தில் வைப்புச் செய்வதற்குத் தொடங்க வேண்டிய காலத்தையும் அரசு நீட்டியுள்ளது. 2025 டிசம்பர் 1ஆம் திகதிக்கு முன்னர் தமது RRSPயில் இருந்து பணத்தை முதல்முறையாக வீடு வாங்க மீளப்பெறுவோர் அதை ஐந்து ஆண்டுகளின் பின்னர் திரும்ப RRSPயில் கட்டத் தொடங்க வேண்டும். இவ்வாறு திரும்ப RRSPயில் தாம் மீளப்பெற்ற பணத்தைக் கட்டத் தொடங்க வேண்டிய காலம் இதுவரை இரண்டு ஆண்டுகளாக இருந்தன.

2023 ஏப்பிரலில் கனடிய மத்திய அரசு அறிவித்திருந்த வரி இல்லாத முதல் வீட்டு சேமிப்புக் கணக்குத் திட்டத்தில் (First Home Savings Account - FHSA) கனடியர் தமது முதல் ஆதனத்தை வாங்க வருடம் ஒன்றிற்கு $8,000வரை சேமிக்க லாம். இத்திட்டத்தில் ஒருவர் அதிகூடிய பணமாக $40,000வரை வைத்திருக்கலாம்.

இக்கணக்கில் தமது பணத்தைச் சேமிப் போருக்கு அப்பணத்திற்கு வரிச்சலுகை கிடைக்கும். இக்கணக்கில் உள்ள பணத்தின் வளர்ச்சிக்கும் வரி விதிக்கப்பட மாட்டாது. அத்துடன் தமது முதல் வீடு வாங்குவதற்கு இப்பணத்தை எவ்வித வரி செலுத்தாமல் எடுக்கலாம்.

நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலண்ட் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கை யில், “RRSP சேமிப்புத் திட்டமும் வரி இல்லாத முதல் ஆதனச் சேமிப்புக் கணக்குத் திட்டமும் இரண்டும் சேர்ந்து முதல் தரம் ஆதனம் வாங்க விரும்பும் இளைய தலைமுறைக் கனடியர்களுக்கு பணத்தைச் சேமிக்க கூடுதலான கருவி களை வழங்கியுள்ளது.” என்றார். அவர் மேலும் கூறுகையில், “புதிதாக கட்டப்பட்ட ஆதனங்களை முதல் முறையாக ஆதனம் வாங்குவோருக்கு அவர்களது காப்பீடு செய்யப்பட்ட அடமானத் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டிய காலத்தை (Amortization) மத்திய அரசு 2024 ஓகஸ்ற் 1ஆம் திகதியில் இருந்து 30 ஆண்டுகளாக நீட்டிக்கிறது” என்றார்.

தற்போது ஆதனம் வாங்கும்போது 20% இற்கு குறைவாக முதலிடுவோரின் அடமானத் தொகை திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவு 25 ஆண்டுகளாக இருக்கின்றது.

நிதியமைச்சரின் இந்த அறிக்கை தொடர் பாக கருத்துத் தெரிவித்த “அடமானத் தொழில் வல்லுநர்கள் கனடா” நிறுவனத் தின் தலைமை நிர்வாக அதிகாரி லோரன் வான் டென் பேர்க் (Lauren Van den Berg), “அரசின் இந்த நடவடிக்கை சரியான திசையில் ஒருபடி முன்னேற்றம்” என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், ‘கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய கால அளவை நீட்டிப்பது முதல்முறையாக ஆதனம் வாங்குவோருக்கு மிகவும் வசதியைக் கொடுக்கும். இது ஆதன உரிமையாளர்களை அதிகரிக்கும். அத்துடன் நாட்டின் பொருளாதார மீட்சிக்குப் பங்களிக்கும். அத்துடன் அரசு இந்த வசதியை ஆதனம் வாங்கும் எல்லா கனடியர்களுக்கும் நீடிக்க வேண்டும். புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் மட்டும் அல்லாமல் மீள் விற்பனைக்கு வரும் வீடுகளுக்கும் இந்த வசதியை நீடிக்க வேண்டும்.” என்றார்.

நிதியமைச்சரின் இந்த அறிக்கை தொடர் பாக கருத்து தெரிவித்த “கனடிய ஆதனம் கட்டுவோர்” சங்கத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கெவின் லீ (Kevin Lee), “கடனை திருப்பிச் செலுத்தவேண்டிய கால அளவை ஐந்து வருடங்களால் அதிகரித்தது மேலும் புதிய வீடுகள் கட்டுவதை ஊக்குவிக்கும்” என்றார். அத்துடன் அவர், “மத்திய அரசின் அடுத்த பத்து ஆண்டுகளில் 5.8 மில்லியன் புதிய வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற இலக்கை அடையவும் இது உதவும்.” என்றார்.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அவரின் வீட்டுவசதி அமைச்சர் ஷோன் ஃப்ரேசருடன்

தொடர்ச்சி 05 பக்கம்
















**25**
**மொழிகளில்
எமது
சேவைகள்**

வெளிநாடுகள் மற்றும்
கனடாவின்
பிற பகுதிகளிலிருந்து
ஒன்ராறியோவிற்கு (Toronto
உட்பட) வருபவர்களின் ஆதன
சிறப்பு தேவைகளை வாடகைக்கு
(நீண்ட காலம் மற்றும் குறுகிய
காலம்) பெற்று தர, ஆதனங்களை
வாங்குவதற்கு (purchase), தகுந்த
அறை நண்பரை (Roommate) பெற்று
தர தகுந்த ஆலோசனை பெற
எமது
நிறுவனத்தை அணுகவும்.

**Office Unit
for Sale**





**Don't miss the unit.**

**EXCELLENT OPPORTUNITY
TO HAVE YOUR OWN OFFICE.**

*Please contact ...*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
**Tel: 416-321-6969**
* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# மீண்டும் கச்சதீவு – தமிழ்நாட்டில் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

கண்ணன்

தமிழ்நாடு அரசியலில், இந்தியா - இலங்கை இடையேயான 'கச்சதீவு' ஒப்பந்தம் அவ்வப்போது எழுவதும் பின்பு அடங்கிவிடுவதும் இயல்பு. இப்போது இந்திய நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு இந்த விவகாரத்தை மீண்டும் பேசத் தொடங்கியுள்ளது பாஜக. இது அவர்களுக்கு தேர்தலில் கைகொடுக்குமா?

### மீண்டும் கச்சத்தீவை கையிலெடுத்த பாஜக

தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை, சமீபத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம்மூலம் பெற்ற கச்சதீவு குறித்த தகவல் அடிப்படையில் தான், திமுக - காங்கிரஸ் கூட்டணியை பாஜகவினர் தேர்தல் பரப்புரைகளில் தற்போது விமர்சித்து வருகின்றனர். இது குறித்து இந்திய பிரதமர் மோடி, "இந்தப் புதிய தகவல்கள் ஒவ்வொரு இந்தியரையும் ஆத்திரமடையச் செய்துள்ளது. காங்கிரஸை ஒருபோதும் நம்பக்கூடாது என்பதை மக்களின் மனதில் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. கடந்த 75 ஆண்டுகளாக இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை காங்கிரஸ் பலவீனப் படுத்தி வருகிறது. நாட்டின் நலன்களை அந்தக் கட்சி முற்றிலுமாகப் புறக்கணித்து வருகிறது" எனக் கருத்துத் கூறியிருந்தார்.

மேலும், கச்சதீவு விவகாரம் குறித்த ஆங்கில நாளேட்டின் கட்டுரையை குறிப்பிட்டு எக்ஸ் சமூக வலைத்தளத்தில் 01.04.2024 அன்று வெளியிட்ட பதிவில், "தமிழகத்தின் நலனைக் காக்க திமுக எதுவும் செய்யவில்லை. கச்சதீவில் வெளிவரும் புதிய விவரங்கள் திமுகவின் இரட்டை வேடத்தை முற்றிலுமாக அவிழ்த்து விட்டுள்ளன. கச்சதீவு மீதான அவர்களின் அடாவடித்தனம், குறிப்பாக நமது ஏழை மீனவர்கள் மற்றும் மீனவப் பெண்களின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், "இந்தியா _ இலங்கை ஒப்பந்தம் போடப்பட்ட இரண்டே ஆண்டுகளில் இந்திய மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் போடப்பட்டதன் விளைவு, கடந்த 20 ஆண்டுகளில் 6,184 இந்திய மீனவர்கள் இலங்கையால் கைது செய்யப் பட்டுள்ளனர். மேலும் 1,175 இந்திய மீன்பிடி படகுகள் இலங்கையர்களால் இந்த 20 ஆண்டுகளில் கைப்பற்றப்பட்டுள் ளது. கச்சதீவு தாரைவார்க்கப்பட்டபோது மாநில அரசிடம் கலந்தாலோசிக்கவில்லை என்று திமுக கூறுவதை ஏற்க முடியாது. இந்தியாவின் நிலப்பரப்பில் அப்போதைய மத்திய அரசும் பிரதமர்களும் காட்டிய அலட்சியமே இது மாதிரியான பிரச்சினைகள் தொடர்ந்து எழக் காரணம். முன்னாள் பிரதமர்கள் யாரும் கச்சதீவு பற்றிக் கவலைப்படவில்லை என்பதுதான் உண்மை" எனப் பேசினார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான், "1976இல் கொடுக்கப்பட்ட கச்சதீவு பிரச்சினையை தேர்தலுக்காக மோடியும் அண்ணாமலையும் தற்போது பேசி வருகின்றனர். கச்சதீவை மீட்க முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் வழக்குத் தொடர்ந்தார். அப்போது மத்திய பாஜக அரசு சார்பில் கச்சதீவு கொடுத்தது கொடுத்ததுதான். அதை திரும்பவும் மீட்க முடியாது என்றனர். தற்போது தேர்தலுக்காக கச்சதீவு பிரச்சினையை பேசுகிறார்கள்" என விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பதிலடியாக சீன ஆக்கிரமிப்பை பேசும் காங்கிரஸ் கச்சதீவு விவகாரத்தில் பாஜக என்ன செய்தது என்பதை சீமான் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், கச்சதீவு குறித்து பாஜக பேசி வருவதற்கு பதலடி யாக, இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தில் உள்ள இந்தியாவின் ஓர் அங்கமான அருணாச்சலப் பிரதேசம் மீது சீனா தொடர்ந்து உரிமை கொண்டாடி வருவதற்கு எதிராக பாஜக அரசு என்ன செய்துள்ளது என்ற கேள்வியை காங்கிரஸ் எழுப்பியது.

சீனாவின் உள்துறை அமைச்சகம் கடந்த ஆண்டு இந்தியாவின் பகுதியாக உள்ள அருணாச்சலப் பிரதேசத்தை உரிமை கொண்டாடும் விதமாக, அப்பகுதியில் உள்ள 11 இடங்களுக்கு சீன, திபெத்திய, பின்யின் மொழிகளில் பெயர் சூட்டி வரைபடம் ஒன்றை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தப் புதிய பகுதிகள் 'திபெத்தின் தெற்குப் பகுதியான ஜங்னான்' பகுதியின் கீழ் வருவதாக சீனா அதில் குறிப்பிட்டிருந்தது. இதில் அருணாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு நிலப்பகுதிகள், இரண்டு குடியிருப்புப் பகுதிகள், ஐந்து மலைச் சிகரங்கள், இரண்டு ஆறுகள் போன்ற முக்கிய பகுதிகள் அடங்கும். இதேபோல இதற்கு முன் 2017ஆம் ஆண்டில், சீனா இதே போன்று அருணாச்சலப் பிரதேசத்தின் ஆறு இடங்களின் பெயர்களை மாற்றி பட்டியலை வெளியிட்டதோடு, பின்னர் 2021ஆம் ஆண்டிலும் 15 இடங்களின் புதிய பெயர்ப் பட்டியலை வெளியிட்டது. இப்படிப் பெயர் மாற்றும் படலத்தின் நான்காவது முறையாக ஏறத்தாழ 30 இடங்களில் பெயர்களை சீனா மாற்றி புதிய பெயர்களைக் கடந்த மார்ச் 30ஆம் திகதி வெளியிட்டு இந்தியாவிற்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.




இப்படி இந்திய நிலத்தை சீனா உரிமை கொண்டாடி வருவதைத் தடுக்க பாஜக அரசு செய்தது என்ன என காங்கிரஸ் கட்சியினர் கேள்வி எழுப்பி வருகின்றனர். மோடி, ஜெய்சங்கர் இருவர் பேச்சுக்கும் பதிலளித்த, தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரம், "1974ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையே நடந்த பரிமாற்றத்தை மோடி இப்பொழுது ஏன் கிளப்புகிறார்?. கச்சத்தீவின் பரப்பளவு 1.9 சதுர கி.மீ. அதனைத் தந்து 6 லட்சம் இலங்கைத் தமிழர்களை மீட்டு அவர்களுக்குச் சுதந்திரமும் புது வாழ்வும் தந்தவர் இந்திரா காந்தி. வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் 27.01.2015ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிஐ மனுவைத் திரும்பப் பார்க்குமாறு வேண்டுகிறேன். அந்த ஆர்டிஐ பதிலில், இலங்கையிடம் கச்சதீவை இந்தியா வழங்கியதற்கான சூழல் நியாயப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இப்போது ஏன் வெளியுறவு அமைச்சகமும் அமைச்சரும் அந்தர் பல்டி அடிக்கின்றனர் எனத் தெரியவில்லை.

2000 சதுர கி.மீ இந்திய பூமியை சீனா அபகரித்திருக்கிறது. "எந்தச் சீனத் துருப்புகளும் இந்திய மண்ணில் இல்லை" என்று சொல்லி சீனாவின் ஆக்கிரமிப்பை மோடி நியாயப்படுத்தினார். மோடியின் பேச்சை சீனா உலகமெங்கும் பரப்பியது. சீனா அபகரித்துள்ள நிலம் ஒரு சிறிய தீவைவிட 1000 மடங்கு பெரியது. நல்லுணர்வுடன் பரிமாற்றம் வேறு, காழ்ப்புணர்வுடன் அபகரிப்பது வேறு" என்று கூறியிருந்தார்.

சீன ஆக்கிரமிப்பு குறித்து பிரதமர் மோடி மௌனம் காப்பது ஏன் என காங்கிரஸ் மூத்த தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியும் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் பேசிய ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, "சீனா உடனான இந்தியாவின் வணிகம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. ஆனால் மறுபுறம் சீனா இந்திய எல்லைகளை ஆக்கிரமிக்கிறது. லடாக் முதல் அருணாச்சலப் பிரதேசம் வரையில் எல்லைப் பகுதிகளை சீனா ஆக்கிரமித்துள்ளது. இவ்வளவு நடந்தும் இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி அமைதி காக்கிறார். அது ஏன்?" என கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனிடையே, இது தொடர்பாக, தமிழ்நாட்டில் வேலூரில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "பிரதமர் நரேந்திர மோடி மக்களிடம் பழைய விடயங்களைச் சொல்லிக் குழப்பி அதன்மூலம் ஆதாயம் தேடப் பார்க்கிறார். அப்படி அவர் முயற்சி செய்வது தான் கச்சதீவுப் பிரச்சினை. இந்திய அரசு இலங்கைக்கு கச்சதீவைக் கொடுத்தது பற்றி இப்போது பேச ஆரம்பித்தது அவர்களுக்கே எதிராகத் திரும்பிவிட்டது. 2014ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த பாஜக, கச்சதீவு மீண்டும் வேண்டும் என்றால் இலங்கை அரசுடன் போரில்தான் ஈடுபட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் கூறியது குறிப்பிடத் தக்கது. பிரதமர் மோடி கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை முறை இலங்கைக்குச் சென்றிருப்பார். அப்போது, ஒருமுறையாவது கச்சத்தீவை மீண்டும் கேட்டிருக்கிறாரா?. இலங்கை அதிபரைச் சந்தித்தபோது கச்சதீவு ஞாபகம் இல்லையா?

கடந்த 2022ஆம் ஆண்டு சென்னைக்கு வந்த மோடி, நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டபோது ஜிஎஸ்டி நிலுவைத் தொகையைத் தர வேண்டும். நீட் விலக்கு அளிக்க வேண்டும் என்று சில கோரிக்கை களை வைத்தேன். அதில் கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும் என்றுதான் முதல் கோரிக்கையை வைத்தேன். அது அவருக்கு ஞாபகம் இருக்கிறதா?.

பல ஆண்டுகளாக கச்சதீவைப் பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போதெல்லாம் அவர்கள் உரிய பதில் அளிக்கவில்லை. கச்சத்தீவு இந்தியாவின் பகுதியாக எப்போதும் இருந்ததில்லை என்றுதான் பாஜக கூறியுள்ளது. இப்போது தேர்தல் நேரத்தில் தகவலை மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இலங்கையைக் கண்டிக்கவும் துணிச்சல் இல்லை, சீனாவை எதிர்க்கவும் துணிச்சல் இல்லை. இந்த லட்சணத்தில் கச்சத்தீவைப் பற்றிப் பேசலாமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

### கச்சதீவு - உண்மையில் என்னதான் நடந்தது?

கச்சதீவு ஒப்பந்தம் தொடர்பாக டாக்டர் சூரியநாராயண் கூறியவை இப்போது பாஜக ஆதரவாளர்களால் சுட்டிக்காட்டப்

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave. E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# வரவு–செலவு…

01ஆம் பக்கத்தொடர்ச்சி

(Sean Fraser) சேர்ந்து நோவா ஸ்கோஷியாவில் உள்ள டார்மவுத்தில்



Prime Minister Justin Trudeau tours modular home construction facility in Calgary

(Dartmouth) 2024 ஏப்பிரல் 2ஆம் திகதி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், மத்திய அரசு புதிய $6 மில்லியன் "கனடா ஆதனவசதி உள்கட்டமைப்பு நிதியை" அறிமுகப்படுத்தினர். இது மேலதிக ஆதனங்கள் அமைப்பதற்குத் தேவையான கழிவுநீர் மற்றும் குடிநீர் உள்கட்டமைப்பு வேலைகளை செய்வதற்குப் பாவிக்கப்படும்" என்றார்.

பிரதம மந்திரியினுடைய அலுவலகம் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் இந்நிதியில் $1 பில்லியன் மழைநீர், கழிவுநீர் மற்றும் குடிநீர் அவசர உள் கட்டமைப்புகளை அமைக்க வழங்கப்படும். மீதமுள்ள $5 பில்லியனும் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இவ் உள்கட்ட மைப்புகளை அமைக்க பகிர்ந்தளிக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியை பெறுவதற்கு மாகாணங் களும் பிரதேசங்களும் ஆதனவசதிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன் சில மத்திய அரசின் நிபந்தனைக்கு உடன்படுவதுடன் சில உறுதிகளையும் மத்திய அரசிற்கு அளிக்க வேண்டும்.

அதில் மத்திய அரசு சுற்றுச்சூழல் தொடர்பாக, "தேசிய கட்டிட தரநிலை" (National Building Code)இல் கொண்டு வரவுள்ள மாற்றங்களை மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையும் அடங்கி யுள்ளது.

இப்பண உதவியைப் பெற மாகாணங் களுக்கு 2025 ஜனவரி 1ஆம் திகதி வரையும் பிரதேசங்களுக்கு 2025 ஏப்பிரல் 1ஆம் திகதி வரையும், காலவரை யறையை மத்திய அரசு அறிவித்துள்ளது. கனடியப் பிரதமர் நாட்டின் செயற்கை நுண்ணறிவுத் துறையை (Artificial intelligence) மேம்படுத்த வரவிருக்கும் வரவு-செலவுத்திட்டத்தில் $2.4 பில்லியனை ஒதுக்கியிருப்பதாக ஊடகவியலாளர் களுக்கு மொன்றியலில் தெரிவித்தார். இப்பண உதவி கனடாவில் உள்ள AI ஆராய்ச்சியாளர்கள், கணினி திறன்களை அதிகரிக்க உதவும் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகளை உருவாக்க உதவும் ஆய்வாளர்கள், இவ்வாறான ஆய்வுகளை ஆரம்பிக்க உள்ளவர்கள் போன்றோருக்கு வழங்கப்பட உள்ளது. AIஇல் முதலி டும் பணம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் பயன்படும்.

ஜஸ்ரின் ரூடோ தனது அடுத்த நிதியாண் டிற்கான வரவு-செலவுத் திட்டம் கனடிய வாடகைக் குடியிருப்பாளர்களைப் பாது காக்கவும் அவர்களை ஆதனச் சந்தை யில் நுழைய வைக்கவும் திட்டங்களைக் கொண்டுள்ளது என ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக் கையில், "கனடியர் வாடகைக்கு நியாய மான விலையில் ஓர் இடத்தைக் கண்டுபிடிக்க மிகவும் சிரமப்படுகின்றனர்.



Deputy Prime Minister Chrystia Freeland makes a housing announcement in Kitchener

அதனால்தான் 2024-2025ஆம் நிதி யாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வாடகைதாரர்களைப் பாதுகாக்கவும், வாடகைச் சந்தையை நியாயப்படுத்தவும், வாடகைக்குடியிருப்பாளர்களை ஆதன உரிமையாளர்களாக மாற்றுவதற்குப் புதிய பாதைகளைத் திறக்கவும் நடவடிக்க எடுத்துள்ளோம்" என்றார்.

இந்நடவடிக்கைகளில் ஒன்றாக குறித்த நேரத்தில் வாடகைப் பணம் செலுத்துவோ ரின் நம்பிக்கையின் தரம் அவர்களது Credit Score கணிப்பில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என கனடிய அடமான சாசனத்தில்" மாற்றம் கொண்டு வரப்பட உள்ளது. அத்துடன் நியாயமற்ற வாடகையை வாங்குவது, வாடகை குடியிருப்பாளர்களை மோசமாக நடத்தும் உரிமையாளர்கள் ஆகிய விடயங்களில் இருந்து வாடகைக் குடியிருப்பாளர்களைப் பாதுகாக்க உதவும் மாகாண சட்ட உதவி நிறுவனங்களுக்கு வழங்க சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு-செலவுத் திட்டத்தில் $15 மில்லியன் ஒதுக்கப்பட உள்ளது.

மத்திய அரசாங்கம் ஒரு புதிய கனடிய வாடகைதாரர்களின் உரிமைகள் மசோதா வையும் முன்மொழிய உள்ளது. இது உரிமையாளர்கள் தாங்கள் வாடகைக்கு விடும் சொத்தின் விலை நிர்ணய வரலாற்றை வெளியிட வேண்டும். இதனால் வாடகைதாரர்கள் உரிமையாளர் களுடன் நியாயமான வாடகைக்காக பேரம் பேசமுடியும். அத்துடன் இந்த மசோதா நாடு தழுவிய நிலையான குத்தகை ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க வகை செய்யும். புனரமைப்பு செய்வதற்காக வாடகைதாரர்களை வெளியேற்றும் உரிமையாளர்களையும் கட்டுப்படுத்துவதற் குரிய வகைகள் இந்த மசோதாவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, துணைப்பிரதமரும் நிதியமைச்சருமான கிறிஸ்டியா ஃப்ரீலண்ட் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் மூவரும் ஏப்பிரல 9ஆம் திகதி Trenton இல் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மத்திய அரசு $8.1 பில்லியனை பாதுகாப்புச் செலவினங் களுக்கு முதலிட உள்ளது எனத் தெரிவித்தனர். அத்துடன் அடுத்த 20 ஆண்டுகளுக்கு $73 பில்லியனை மத்திய அரசு பாதுகாப்பு செலவினங்களுக்காக முதலிட உள்ளது எனவும் தெரிவித்தனர். இதன்மூலம் கனடிய அரசு கனடாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.76% 2030ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செல வினங்களுக்கு முதலிடும் என எதிர் பார்க்கப்படுகிறது. கனடா உட்பட எல்லா நேட்டோ (NATO) நாடுகளும் தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2%ஐ பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிட உறுதியளித்துள்ளன.

நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலண்ட் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் இதுவரை முன் மொழியப்பட்ட 2024-2025ஆம் நிதியாண்டிற் கான வரவு-செலவுத் திட்டத்தில் $35




Prime Minister Justin Trudeau making a housing announcement in Dartmouth

பில்லியனுக்கு அதிகமான பணம் முதலிடப்பட்டுள்ளது. இதற்கு எவ்வாறு லிபரல் அரசு நிதியளிக்கத் திட்டமிட்டுள்ள னர் என கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நிதி அமைச்சர், "கனடாவில் கனடியர் முதலீடு செய்வதற் கான அவரச தேவை இன்று இருப்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். மேலும், இளம் கனடியர்களுக்கு நாங்கள் உதவ வேண்டிய ஒரு முக்கிய தருணத்தில் உள்ளோம் என்பதையும் நாம் அறி வோம். அதற்கு முதலீடுகள் தேவை. அவற்றை நாம் உருவாக்குகிறோம். இதுவே எமது வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள நிதிநிலை. இந்த முதலீடுகளை நிதிரீதியாகப் பொறுப்பான திட்டமிட்ட முறையில் செய்ய நாங்கள் முற்றிலும் கடமைப்பட்டுள்ளோம். நாங்கள் அதைச் செய்யப் போகிறோம்" என்று கூறினார். ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இம்முதலீடு களுக்கு எங்கிருந்து நிதி வருகிறது என்று நேரிடையாகக் கூறாவிட்டாலும் கடின உழைப்பாளிகளான நடுத்தர வர்க்க கனடியர்களின் வரிச்சுமை அதிகரிக்கப்பட மாட்டாது என்று கூறியிருந்தார்.

மத்திய அரசின் அதீத முதலீடுகளும் செலவினங்களுக்கு கனடிய வங்கியின் பணவீக்கத்தை 2%இற்குள் வைத்திருக்க முயலும் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்காமல் இருக்க வேண்டும் என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.




# மல்யுத்தத்தில் சாதனை – அகரன், அட்சயா

விளையாட்டு மற்றும் தற்காப்புக் கலைகளில் அட்சயாவின் பயணம், 20 மாதங்கள் இளையவரான அவரது இளைய சகோதரர் அகரனுடன் விளையாட்டுத்தனமான போட்டியுடன் தொடங்கியது. விளையாட்டு முதல் கல்வித் தகைமைகள் மற்றும் தங்கள் இரவு உணவை முடிப்பதுவரை, அவர்கள் எல்லாவற்றிலும் போட்டியிட்டனர். இதன் விளைவாக இரண்டு உடன்பிறப்புக்களும் நன்கு வளர்ந்து சிறந்த 'பண்பட்ட மனிதர்களாக' தங்களை மெருகேற்றினர். போட்டித்திறன் எப்போதும் அட்சயாவின் தன்மையை வரையறுத்து, கல்வி மற்றும் தடகளத்தில் சிறந்து விளங்க அவளைத் தூண்டுகிறது. குறிப்பாக, விளையாட்டு அவளுக்கு மகிழ்ச்சி மற்றும் நிறைவின் ஆதாரமாக இருந்தது. எந்தத் தடையையும் சமாளிக்கும் திறன் கொண்ட ஒரு நெகிழ்ச்சியான மற்றும் நம்பிக்கையான பெண்ணாக அவளை வடிவமைக்கிறது.

மறுபுறம், அகரன் விளையாட்டில் இயல்பாகவே ஈடுபாடும் திறமையும் கொண்டவர். அகரனின் விளையாட்டு மீதான ஆர்வம் ஜியு-ஜிட்சுவுடன் (Jiu Jitsu) தொடங்கியது. அங்கு அவர் நான்கு முறை மாகாண சாம்பியன், நான்கு முறை வடஅமெரிக்க கிராப்பிங் சாம்பியன் மற்றும் மூன்று முறை பான் அமெரிக்கன் சாம்பியனாக குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றார். இருப்பினும், மல்யுத்தத்தில் சேர்ந்த பிறகு, அவர் மல்யுத்த விளையாட்டில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். பயிற்சிகள் போட்டிகளின் போது காயங்கள், உபாதைகள் ஏற்படி னும் மனந்தளராமல் தனது உடல், மனவலிமையை



**இவர்களின் சகல செலவுகளும் பெற்றோரினதும் நலன் விரும்பிகளினதும் உதவியினால் மட்டுமே செலுத்தப்படுகின்றன. இவர்களின் தொடர் வெற்றிகளுக்கு உங்களின் ஆதரவை கொடுக்க முடியும்.**

Etransfer to -
japaprabu23@gmail.com

மெருகேற்றி ஊக்கப்படுத்தி, தயார்படுத்திக் கொண்டார். மற்றும் ஒலிம்பிக்கில் கனடாவுக்காக கனடியத் தமிழனாகத் தங்கப் பதக்கம் வெல்வதில் தனது பார்வையை அமைத்துள்ளார்.

இதேபோல், அட்சயாவின் பயணம் ஜியு-ஜிட்சுவுடன் தொடங்கியது. அங்கு அவர் மூன்று முறை மாகாண சாம்பியன் பட்டத்தையும் ஒரு முறை வடஅமெரிக்க கிராப்பிங் அசோசியேஷன் சாம்பியன்ஷிப்பையும் வென்றார். ஜியு-ஜிட்சுவுக்கு 5 வயதில் - அகரனுக்கும், 7 வயதில் - அட்சயாவுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்கள் இருவரும் விளையாட்டில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டனர். அவர்கள் இருவரும் ஜியு-ஜிட்சுவில் தங்கள் திறமைகளை மேம்படுத்த மல்யுத்தம் கற்கத் தொடங்கினர். கொரோனாவால் ஏற்பட்ட இடையூறுகள் இருந்தபோதிலும், அவர்கள் 2022இல் மல்யுத்தத்தை மீண்டும் தொடங்கினர். அதை தங்கள் முதன்மை விளையாட்டாக முன்னுரிமை அளித்தனர். கொரோனாவால்




முன் வைக்கப்பட்ட சவால்கள் இருந்தபோதிலும், அவர்கள் 2022இல் மீண்டும் மல்யுத்தத்தைத் தொடங்கினர். விளையாட்டிற்கான தங்கள் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தினர் மற்றும் மல்யுத்தத்தை அவர்களின் முதன்மை மையமாக முன்னுரிமை அளித்தனர்.

மல்யுத்தத்தில், இருவரும் மூன்று முறை மாகாண சாம்பியன்ஷிப்பை வென்றுள்ளனர். 2023இல், அவர்கள் தேசிய சாம்பியன்ஷிப்பில் பாராட்டத்தக்க இரண்டாவது இடத்தைப் பெற்றனர். ரீம் இம்பாக்ற் WCஇல் (Team Impact WC) உள்ள அவர்களின் பயிற்சியாளர்களின் உறுதியினால் தூண்டப்பட்டு, அட்சயா மற்றும் அகரன் ஆகியோர் கடுமையான ஓஃவ்-சீசன் (off-season) பயிற்சிக்குத் தங்களை அர்ப் பணித்தனர். அவர்களின் கடின உழைப்பு பலனளித்தது. அவர்கள் தேசிய சாம்பியன்களாக முடிசூட்டப்பட்டனர். இது அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் விளையாட்டின் மீதான ஆர்வத்திற்குச் சான்றாகும். அவர்கள் சந்திக்கும் தோல்விகளை தங்களை மென்மேலும் ஊக்கப்படுத்தும் பாடமாகவும், ஒவ்வொரு வெற்றிகளையும் இது தங்கள் கனவின் ஒரு சிறு துளியே இன்னும் கடக்க வேண்டிய பாதை இன்னும் உள்ளதென தங்களைத் தயார்ப்படுத்தினர்.

மேலும், மல்யுத்தத்தில் அட்சயாவின் சாதனைகள் OFSAA (Ontario Federation of Secondary Athletic Association)இல் இரண்டு முறை வெள்ளி வென்றதும் அடங்கும். மறுபுறம், அகரன், இரண்டு முறை OFSAAஇல் தங்கம் வென்றார். இந்தச் சாதனையை சாதித்த செயின்ட் மேரிஸ் கத்தோலிக்க மேல் நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு முதல் தடகள வீராங்கனை ஆனார். கூடுதலாக, அவர் பள்ளியின் வரலாற்றில் மல்யுத்தத் திற்கான முதல் OFSAA சாம்பியன் ஆவதன்மூலம் வரலாறு படைத்தார். இவர்கள் மென்மேலும் இத்துறையில் பிரகாசித்து கனடாவை பிரதிநிதித்துவப் படுத்தி வெற்றிகளைப் பெற விளம்பரம் பத்திரிகையும் அதன் வாசகர்களும் வாழ்த்துகின்றனர். இவர்கள் கனவு நிச்சயம் வசப்படும்.

## மீண்டும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

படுகிறது. சூரியநாராயண், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஆய்வுப் புலத்தில் இந்தியாவின் முன்னணி நிபுணர்களுள் ஒருவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தெற்கு, தென்கிழக்கு ஆசிய ஆய்வு மையத்தின் நிறுவன இயக்குநராகவும் மூத்த பேராசிரியராகவும் இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழுவிலும் பணியாற்றியுள்ளார். கச்சதீவு விவகாரம் தொடர்பாகப் பத்திரிகையாளர் கே. முரளீதரனுடன் இணைந்து 'கச்சதீவும் இந்திய மீனவரும்' என்ற நூலை எழுதியுள்ளார், சூரியநாராயண்.

இவர் 'காலச்சுவடு' பத்திரிகைக்குக் கொடுத்த நேர்காணலில், "இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினை 1974வரை பெரிதாகக் கிடையாது. 1974 - 1976வரை இரு நாடுகளுக்கும் இடையில் கடல் எல்லையைப் பிரித்த பிறகுதான் பிரச்சினை தொடங்கியது. அதன்பிறகு, இது உங்கள் பகுதி, இது எங்கள் பகுதி என்று ஆகிவிட்டது.

1974 ஒப்பந்தத்தின் மூலம் கச்சதீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது. இது பெரிய தவறு. அந்த ஒப்பந்தத்தின் 5 மற்றும் 6ஆம் பிரிவுகளின்படி கச்சதீவைச் சுற்றிலும் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது. தமிழக மீனவர்கள் கச்சதீவில் வலைகளை உலர்த்தலாம், புனித அந்தோனியார் கோவிலுக்கு வரலாம் என்று மட்டும் இலங்கை கூறியது. அப்போது எல்லோரும் பருத்தி வலைகளையே பயன்படுத்தினர். அவற்றை உலர்த்த வேண்டியிருந்தது. அதன்பின்னர் நைலோன் வலைகள் வந்துவிட்டன. இவற்றை உலர்த்தும் கேள்வியே இல்லை. அதனால் வலைகளை உலர்த்தக் கச்சதீவு தேவை என்ற முக்கியத்துவம் போய்விட்டது.

ஆனாலும், 1983வரை நிலைமை மிகச் சாதாரணமாகத்தான் இருந்தது. தமிழக மீனவர்கள் சாதாரணமாக அங்கே சென்று வந்துகொண்டிருந்தனர். இந்நிலையில் இனப் பிரச்சினை தொடங்கிய பிறகு அங்கிருந்து போராளிகள் இங்கு (தமிழ்நாடு) வருவது, இங்கிருந்து மருந்து, எரிபொருள், ஆயுதம் கடத்தப்படுவது போன்றவை ஆரம்பித்தன. பாக் நீரிணை வழியாகத் தமிழ்ப் போராளிக் குழுக்கள்



தமிழகத்திற்கு வர ஆரம்பித்த பிறகுதான் இலங்கைக் கடற்படை கச்சதீவில் கவனம் செலுத்தத் தொடங்கியது. தமிழக மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்த ஆரம்பித்தனர். முதல்முறையாக 1983 ஒகஸ்ற் மாதம்தான் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

தமிழக மீனவர்கள் மட்டும்தான் இலங்கைக் கடற்பகுதிக்குச் செல்கின்றர் என்று சொல்ல முடியாது. அவர்களும் இந்தியப் பகுதிக்கு வந்து மீன் பிடிக்கவே செய்தார்கள். இலங்கையில் மத்தி மீன் மிகப் பிரபலம். அந்த மீன் இந்தியப் பகுதியில் கிடைப்பதால் அதைப் பிடிக்க வருவர். இந்தியர் அந்த வகை மீன்களைப் பெரிதாக விரும்புவதில்லை. இந்த மீனைப் பிடிப்பதற்காக அவர்கள் மினிகாய், அந்தமான் தீவுகள்வரை வருவார்கள். அவர்களில் பலர் இந்தியக் கடலோரக் காவல் படையால் பிடிபட்டிருக்கின்றர். ஆனால், அவர்களை இந்தியக் கடற்படையினர் சுடுவதில்லை. சட்டப்படியே நடத்துவர். மற்றொரு நாட்டின் கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடிப்போரைச் சுடுவதை சர்வதேசச் சட்டங்கள் அனுமதிக்கவில்லை.

1983க்குப் பிறகு இலங்கைத் தமிழர் பகுதிகளில் மீன்பிடித்தல் தடை செய்யப்பட்டுவிட்டது. இதனால் அங்கு வாழும் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். இதில் மன்னார் மாவட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அங்கிருந்த மீனவர்கள் தமிழகத்துக்கு அகதிகளாக வரத் தொடங்கினர். இந்திய மீனவர்களுக்காக வேலை பார்க்கத் தொடங்கிய அவர்கள் இலங்கை அருகில் எங்கே மீன் கிடைக்கும் என அடையாளம் காட்டினர்.

2002இல் போர் நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தது. அப்போது இலங்கையில் தமிழரில் ஒரு பகுதியினர் மீண்டும் மீன் பிடித்தலுக்குச் செல்லத் தொடங்கினர். அக்காலகட்டத்தில், ஒரு

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

We are beyond excited to share that.....

# CANADA NEEDS 1.3M MORE HOMES BY 2030

## THE FIRST-TIME HOME BUYER INCENTIVES

### 01 30-YEAR MORTGAGES FOR NEW HOME BUYERS

With lower monthly payments, more first-time buyers will qualify for slightly larger mortgages, increasing the range of homes they can afford.



### 02 YOU CAN USE THE HOME BUYERS' PLAN (HBP), RRSP

The maximum RRSP withdrawal for first-time homebuyers is $60,000 for down payment ($120,000 for a couple), with a 15-year repayment period.

### 03 RENTERS CAN NOW BOOST THEIR CREDIT SCORE

Renters will be able to share their rent payment history directly with Equifax that can lead to an average credit score increase of 5% (around 32 points)

### 04 THE FIRST HOME SAVINGS ACCOUNT

FHSA offers a unique opportunity for first time buyers to save up to $8000 annually, and lifetime contribution limit is $40,000

### 05 HOME BUYERS AMOUNT

HBA provides a non-refundable Tax Credit of up to $10,000 for first-time buyers.






**Para Tisikulasingam**
Realtor
HomeLife/GTA Realty Inc. Brokerage*
(647) 296-0596

HOMELIFE
HIGHER STANDARDS
HOME LIFE / GTA REALTY INC.,Brokerage*
*Independently Owned and Operated
5215 Finch Ave E, Unit 203, Toronto, ON M1S 0C2
O:416.321.6969 | F: 416.321.6963

**Raja Mahendran**
Broker/Owner
HomeLife/GTA Realty Inc. Brokerage*
(416) 321-6969

## நாமும் நமது இல்லமும் 652

# மீண்டும் மாறாத கனடிய வட்டிவீதம் 5%



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய மத்தியவங்கி (Bank of Canada) ஏப்ரல் 10, 2024 அன்று ஏழாவது தடவையாகத் தனது வட்டி வீதத்தை மாற்றாமல் வைத்துள்ளது.

உலக பொருளாதாரம் 2.75% என்ற பெறுமதியில் இந்த வருடம் (2024) அதிகரிக்கும் என மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. எனினும், உலகின் முக்கிய பொருளாதார நாடுகளின் பணவீக்கம் சிறிது சிறிதாக இறங்கிவரும் எனவும் எதிர்பார்க்கிறது. எனினும், அமெரிக்க பொருளாதாரம் எதிர்பார்த்ததனைவிட அதிகமாக வளர்வதாகவும் தெரிகிறது. இதனால், அமெரிக்க வட்டிவீத இறக்கம் எவ்வாறு இருக்கும் என உடனடியாகக் கூற முடியாது. அமெரிக்க வட்டி வீதம் உடனடியாக இறங்கும் என எதிர்பார்க்க முடியவில்லை.

2023இன் இரண்டாவது அரை இறுதி ஆண்டில் (second half of 2023) கனடிய பொருளாதாரம் தற்காலிகமாக சமநிலையில் இருந்தது. புதிய வேலைகளின் அதிகரிப்பு மிகவும் குறைவாகவும் காணப்பட்டது. தொழில் இல்லாதவர்களின் பெறுமதி (Unemployment Rate) 6.1% ஆக அதிகரித்தது.

கனடிய மக்களின் அதிகரிப்பாலும், கனடியர்களின் மாதாந்த செலவுகளாலும் பொருளாதாரம் இந்த வருட இரண்டாவது அரை இறுதி ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் (2025) பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கலாம் என கனடிய வங்கியின் ஆளுநர் திரு. ரிவ் மக்கெலம் (Tiff Macklem) தெரிவித்திருந்தார்.

பணவீக்கம் 2.8%ஆகக் காணப்பட்ட போதிலும் தமது குறிக்கோள் 2%ஐ அடுத்த வருடம் அடையலாம் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

76.3%ஆன ஆதனங்களின் உரிமைகடந்த பத்து (10) வருடங்களிற்கு மேலாக, ஆதனத்தில் முதலீடு செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. எனினும், முதல் தடவையாக ஆதனம் வாங்குவோரினதும் (First Time Home Buyer) மற்றும் தாம் வாழும் ஆதனத்தை விற்று பெரிய ஆதனத்திற்கு மாறுவது, 2023இல் மந்தநிலையை அடைந்ததனைக் காணக்கூடியதாக இருந்தது.

ஒன்ராறியோவில் ஆதனத்தின் உரிமையை உறுதிப்படுத்தும் (Registration) நிறுவனமான Teranetஇன் அறிக்கையிலிருந்து 2011இல் 15.3%ஆனோரே ஒன்றிற்கு மேற்பட்ட ஆதனத்தை உரிமை கொண்டு இருந்தனர் எனத் தெரிய வருகிறது.

ஆனால், 2022இல் இந்தப் பெறுமதி 25.2%ஆக அதிகரித்தது. ஆனால், 2023இல் இந்தப் பெறுமதி 23.7%ஆகக் குறைந்தது.

2011இல் முதல் தடவை ஆதனம் வாங்கியோரின் பெறுமதி 23.6%ஆகக் காணப்பட்டது.

ஆனால், 2023இல் 21.9%ஆகக் குறைந்து காணப்பட்டது. 2023இல் 7.6%ஆன உரிமையாளர்கள் 11 அல்லது அதற்கு மேற்பட்ட ஆதனங்களை உரிமை கொண்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

அதிக ஆதனங்களை உரிமை கொண்ட இடங்களாக ரொறொன்ரோ மற்றும் மஸ்கோகா (Muskoka) காணப்படுகிறது.

பொதுவாக பல ஆதனங்கள் உரிமை கொள்வோர் தாம் குடியிருக்கும் பகுதிக்கு அண்மையில் தமது முதலீட்டு ஆதனங்களை வைத்திருப்பதனையே விரும்புவர். பராமரிப்பதற்கு இலகுவாக இருக்கும் என்பதே இதற்குரிய முக்கிய காரணமாகும்.



2023ஆம் ஆண்டில் பல ஆதனங்களை உரிமை கொள்வோரின் எண்ணிக்கை குறைந்து வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் 2022இன் ஆரம்பத்திலிருந்து 2023இன் ஜூலைவரை வட்டிவீத அதிகரிப்பினால் முதலீட்டாளர்களின் மாதாந்தக் கட்டுப்பண அதிகரிப்பே ஆகும். அத்துடன் ஆதன விலையின் இறக்கமும், வாடகையாளர்களினால் ஏற்படும் நடவடிக்கைகளும் காரணம் ஆகும். இன்றைய காலத்தில் மாதாந்த வாடகை வருமானம் ஆதனத்தின் மாதாந்தச் செலவைவிட அதிகமாகக் காணப்படுகிறது.

2011இலிருந்து 2022வரை அடுக்குமனை அலகுகளிலேயே அதிகமான ஒன்றிற்கு மேற்பட்ட ஆதன உரிமையாளர்கள் முதலிட்டு இருந்தனர்.

முதலிட்டாளர்களின் ஆதனத்திலான முதலீடு 2011இல் 20.6%ஆகவும், 2022இல் 30.9%ஆகவும் காணப்பட்டது.

2024இல் கைமாற்றப்படும் ஆதனங்களில், வாங்குவோர் குடியிருப்பதற்காகவே ஆதனத்தை வாங்குவதனைக் காணக்கூடியதாக இருப்பதாக Teranet தெரிவிக்கின்றது. முதலீட்டாளர்களின் நிலைமை மாறுவதனையும் காணலாம்.

முதலீட்டாளர்கள் 2023இன் இறுதியில் 2022இன் ஆரம்பத்தில் வாங்கிய விலையைவிட குறைந்த விலையில் விற்பதனைக் காணலாம்.


2023 மற்றும் 2024ஆம் ஆண்டின் முதல் நான்கு (4) மாதங்களில் புதிய அடுக்குமனைத் தொகுதிகளின் சந்தைப்படுத்தல் கைகளின் விரல்களினால் எண்ணக்கூடிய அளவிற்கு மிகக் குறைந்துள்ளது. ஏற்கனவே சந்தைப்படுத்தப்பட்ட கட்டிடத் தொகுதியில் விற்கப்படாமல் இருக்கும் வீடு மற்றும் மனைகளை விற்பதிலேயே நிர்மாண நிறுவனங்கள் அதிக கவனம் எடுப்பதாக நிர்மாண நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இதனால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் இருப்பிட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக ஒன்ராறியோ அரசு புதுப் புதுத் திட்டங்களை அறிவித்து வருகிறது.

புது அறிவித்தல்கள், எதிர்கால ஆதன நெருக்கடியைக் குறைக்கலாம் என எதிர்பார்க்கலாம்.

இலகுவாக ஆதனங்களை நிர்மாணிப்பதற்குரிய Permit பெறுவது, ஏற்கனவே கட்டப்பட்ட ஆதனங்களில் மேலதிக வாழ்விடங்களை அமைப்பது போன்றவற்றில் இலகுத்தன்மை காணப்படுகின்றது. வாடகைக்காக நிர்மாணம் செய்யப்படும் அடுக்குமனைகளிற்கு புதிய திட்டங்கள் மற்றும் சலுகைகள் கொண்டு வந்துள்ளது.

இப்பொழுது ஒன்ராறியோவில் இருக்கும் மாகாண அரசு அதிகளவான ஆதனங்களை நிர்மாணிப்பதற்கு நல்ல பல புதிய திட்டங்களைத் தொடர்ந்து அறிவிப்பதனைக் காணலாம். இவற்றை முறையாக நடைமுறைப்படுத்தினால் அதிக வீடுகள் மற்றும் மனைகள் உருவாகலாம்.

TERANET is a Canadian company known for its electronic land registration system, Teranet provide services, related to property information, title searching and registration.




MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



# கனடாவில் வாகன காப்புறுதிகளின் விலையை தீர்மானிக்கும் இரு ஆவணங்கள்

வாகனம் சொந்தமாக வாங்கும் ஒருவர் அதற்கு காப்புறுதி உடன்படிக்கை செய்வதற்கு மனு செய்யும்போது காப்புறுதி விலைகளைத் தீர்மானிப்பதில் அவர் தொடர்பாக கனடாவின் காப்புறுதிக் கம்பனிகள் இரு முக்கியமான ஆவணங்களை முதலில் பரிசீலனை செய்கிறது. அவ்விரு ஆவணங்களும் ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படும்.

(1) Autoplus report
(2) Provincial driving abstract

'Autoplus report' என்பதில் தங்களின் பெயர், பிறந்த காலம், வதிவிடங்கள் தொடர்பான விபரங்கள், ஏற்கனவே உரிமையாளராகியிருந்த வாகனங்களின் அடையாளங்களுடன், ஒவ்வொரு வாகனத்துக்கும் எந்தெந்த கம்பனிகளில் வாகன காப்புறுதிகள் இருந்தவை பற்றிய சகல விபரங்கள், இக்காலங்களில் ஏதாவது விபத்துகளினை எதிர்கொண்டிருந்தால் அது தொடர்பான முழுமையான தகவல்களுடன் அதில் தவறு எந்த பக்கம்? எவ்வளவு வீதத்தில்? என்பவை உட்பட எவ்வளவு தொகை? எந்த கம்பனியில்? எந்த பிரிவின்கீழ் நட்டஈடுகள் பெற்றார்? என்ற விபரங்கள், வாகன காப்புறுதியில் பதிவில் இருந்த ஏனையோர் பற்றிய விபரங்கள் எனப் பல விடயங்கள் தங்களின் சாரதி அனுமதிப் பத்திர இலக்கத்தினை அடையாளமாக வைத்து பதிவில் இருக்கும்.

கனடாவின் சகல வாகன காப்புறுதி



கம்பெனிகளுடனும் இணைப்பிலிருக்கும் சி.ஜி.ஐ தகவல் மையம் (C.G.I Group Inc.) என்னும் நிறுவனம் கடந்த சுமார் 25 வருடங்களுக்குள் உள்ள ஒவ்வொருவரின் தகவல்களையும், அவர்களின் சாரதி அனுமதி பத்திரத்தினை அடையாளமாக வைத்து சேகரித்து வைத்திருக்கின்றது. ஆனால் காப்புறுதி கம்பனிகள் இன்றிலிருந்து கடந்த ஆறு வருடங்களுக்குரிய பதிவுகளையே பரிசீலனைக்காக எடுத்துக்கொள்வது வழமையில் நடந்து வருகின்றது.

ஒவ்வொருவரும் தங்கள் பெயரில் உள்ள இவ் அறிக்கைகளை பெறவிரும்பினால் கீழே இணைக்கப்பட்ட அவர்களின் விண்ணப்பபடிவங்களினை நிரப்பி மின் அஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி இலவசமாகப் பெற்று பரிசீலனை செய்துகொள்ளலாம். தங்கள் காப்புறுதி முகவர் அலுவலகம் ஊடாக உடனடியாகவும் பெற்றுக்கொள்ளலாம். நிறுவனம் பற்றிய தகவல்களை Google இணைய தளத்தினூடாகவும் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு தங்களின் 'Autoplus report' அறிக்கையினை எடுத்துப் பரிசீலனை செய்து பார்க்கும்போது அதில் தவறான முறையிலும் பதிவுகள் உருவாக்கப்பட்டிருக்கலாம். அங்கு ஏதாவது திருத்தங்கள் செய்யவிரும்பினால் எந்த வாகன




காப்புறுதி கம்பனியினால் பதிவுகள் வழங்கப்பட்டதோ அந்தக் கம்பனியின் வாடிக்கையாளர் நியாயமன்றங்களின் (Example : Insurance Ombudsman offices) ஊடாக சரியான நிரூபனங்கள் மூலம் பதிவுகளில் திருத்தங்கள் செய்ய முயற்சிக்கலாம்.

வாகனக் காப்புறுதிகளின் விலைகளை தீர்மானிக்கும்போது இரண்டாவதாக பரிசீலனை செய்துகொள்ளும் முக்கியமான ஆவணம் "Provincial Abstract Record" ஆகும். இதில் வாகனம் செலுத்தும் சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பான விபரங்களுடன் வாகனம் செலுத்தும்போது பெற்றுக்கொண்ட தண்டனை ரிக்கெற்றுகள் பற்றிய விபரங்கள் புள்ளி மதிப்பீட்டு அளவைகளால் (Provincial demerit points system) எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரங்கள் உள்ளடக்கியிருக்கும். இப்பதிவுகள் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அழிந்துவிடும்.

இவ்விரு ஆவணங்களினை அடிப்படையாக வைத்தே ஒருவரின் வாகனமோட்டும் தகைமையினை 'ஸ்ரார்' (Star) என்ற சொல்லில் காப்புறுதிக் கம்பனிகளினால் குறிப்பிடப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றது. உதாரணமாக கடந்த ஆறு வருடங்களில் காப்புறுதி வைத்திருந்து வாகனம் செலுத்தும் ஒருவர் அவ் ஆறு வருடங்களில் தண்டனை ரிக்கெற்றுகள் எவையும் வாங்கிக்கொள்ளாது, விபத்துகளிலும் சிக்கி நட்டஈடுகள் என எவையும் பெற்றிருக்கவில்லை என இவ்விரு ஆவணங்களின் பதிவுகளில் இருந்தால்

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# நானிலம் போற்றும் நட்பு - 42



- அகணி -
authorakani@gmail.com

"இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்." (அதிகாரம் தீ நட்பு, குறள் 822) என்ற குறளிற்கு "இனம் போலவே இருந்து உண்மையில் இனம் அல்லாதவரின் நட்பு, பொதுமகளிரின் மனம் போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நண்பர் போல் நடிப்பவர் நட்பு, பரத்தையர் மனம்போல் அடிக்கடி வேறுபடும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"நண்பர்போல நடிப்பவரின் நட்பு, பெண்கள் மனம்போல மாறுபடும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"உற்றாராக இல்லாமல் உற்றார்போல நடிப்பவர்களின் நட்பு, மகளிருக்குரிய நற்பண்பு இல்லாமல் அப்பண்பு உள்ளவர்போல நடிக்கும் விலை மகளிரின் மனம்போல உள்ளொன்றும் புறமொன்றுமாக இருக்கும்." என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

நண்பர்போல நடிப்பவரின் நட்பு மாறுபடும் தன்மையானது என்ற அறிவுரையை இந்தக் குறள் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்தி மூன்றாவது பாடலைக் கவனிப்போம்.
இது கோப்பெருஞ்சோழன் பாடிய பாட்டு. மணம் புரியாமல் காலங் கடத்திக் கொண்டு வந்த தலைவனைப் பார்த்துத் தோழி கூறியது. இது மருதத்திணை சார்ந்தது.

"எம் அணங்கினவே மகிழ்ந! முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை
நேர்இறை முன்கை பற்றிச்
சூர் அரமகளிரொடு உற்ற சூளே."

ஊரின் புறத்திலே என்றும் வற்றாத நீர்ப் பெருக்குள்ள பெரியதோர் நீர்நிலை. அதன் ஊருக்குப் புறத்தேயுள்ள இந்த நீர் நிலையின் துறையிலே ஒரு நாள் ஓர் இளம் பெண்ணும், ஓர் இளங்காளையும் சந்தித்தனர். அவர்களுக்குள் காதல் பிறந்தது. அவர்களுடைய கண்கள் அவர்களை ஒன்றாக இணைத்துவிட்டன.

அயலிலே யாரும் இல்லை. நல்ல வாய்ப்பாக அமைந்தது. அவன் தலைவனானான் அவள் தலைவியானாள் இருவரும் என்றும் பிரிவதில்லையென்று சூளுரைத்துக் கொண்டனர்.

"நம் செயலைப் பார்த்துக் கொண்டிருக்கும் தேவ மகளிர் அறியும்படி நான் உறுதிமொழி உரைக்கின்றேன். உன்னை விரைவில் மணந்து கொள்ளுவேன். நல்லறமாகிய இல்லறம் நடத்துவேன். இருவரும் இன்புறுவோம்." என்றான் தலைவன்.

ஆனால், தலைவன் தன் உறுதிமொழியை நிறைவேற்ற ஊக்கம் எடுத்துக் கொள்ளவில்லை. மும்முரமாக முயற்சி செய்யவில்லை. காலம் நீண்டு கொண்டே போயிற்று. தலைவன் இம்மாதிரி உறுதிமொழியும், தவணையும் சொல்லி மணம் புரிவதைத் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தான்.

இதனால் தலைவி மிகவும் வருத்தம் அடைந்தாள். தலைவன் எப்பொழுதுதான் அவன் சொல்லை நிறைவேற்றுவானோ என்று நினைத்து ஏங்கியிருந்தாள். தலைவியின் எண்ணத்தையும் ஏக்கத்தையும் கண்ட தோழி ஒரு நாள் தலைவனைக் கண்டபோது அவனிடம் நீ ஏன் இப்படிக் காலங் கடத்துகின்றாய் என்று கேட்டுவிட்டாள்.

தோழி தலைவனிடம் கூறிய செய்தியைச் சொல்வதே இப்பாடல்.
இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

"தலைவனே! முன்னேயுள்ள, நனை முதிர் அரும்பு முற்றி மலர்ந்த புன்கமரத்தின் பூக்கள், சிதறிக்கிடக்கின்ற வெண்மையான மணலின் காட்சி, வேலனால் அமைக்கப்பட்ட, வெறி முருகனுக்கு வெறியாட்டு எடுக்கும் இடங்களில் எல்லாம், செந்நெல்லால் ஆகிய, வெண்மையான பொரிகளை, சிந்தியிருப்பதைப் போலக் காணப்படும். இத்தகைய மணல்மேடுகள் பொருந்திய, எமது ஊரில் உள்ள பெரிய நீர்த்துறையிலே, எம் தலைவியின் சிறிய மூட்டுள்ள முன் கையைப்பற்றி, நேர்மை தவறினவர்க்கு அச்சத்தைத்தரும் தெய்வ மகளிரைச் சாட்சியாகவைத்து, நீ கூறிய உறுதிமொழி. இப்பொழுது எம்மைத் துன்புறுத்தின."

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்தி நான்காவது பாடலைக் கவனிப்போம். இப்பாடல் மீனெறி தூண்டிலார் என்னும் புலவரால் பாடப்பட்டது. இது காரணப் பெயர். 'மீனெறி தூண்டில்' என்னும் தொடர் இப்பாடலில் காணப்படுகின்றது. தலைவன் மணம் புரியாமல் காலத்தைக் கடத்தியபோது, தலைவி, தன் துன்பத்தைத் தோழியிடம் உரைத்தது தலைவி கூற்று. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

"யானே ஈண்டையேனே, என் நலனே
ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக்,
கான யானை கைவிடு பசும்கழை
மீன் எறி தூண்டிலின் நிவக்கும்,
கானக நாடனொடு ஆண்டு ஒழிந்தன்றே."

"A best friend is like a four -leaf clover, hard to find and lucky to have." – Unknown

தலைமகன் விரைந்து வருவான் தன்னை மணந்து கொள்வான் தன் தனிமைத் துன்பம் தணியும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் தலைவி. தலைமகன் தான் வாக்களித்தபடி விரைந்து வந்து மணக்கவில்லை காலம் கழிந்து கொண்டே போயிற்று.
இந்நிலையில் ஏங்கியிருந்த தலைவி தன் துன்பத்தைத் தோழியிடம் கூறி வருந்தினாள்.
இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

"தோழி, யான் மட்டும் இங்கேயிருக்கின்றேன். என்னோடு சேர்ந்திருந்த எனது அழகு, தினைப் புனத்தைக் காப்போர் விடுகின்ற கவண் கல்லோசைக்கு அஞ்சி, காட்டு யானை, கைவிடு கைவிட்ட பசுமையான மூங்கில, மீன் விழுந்த தூண்டிலைப் போல, நிவக்கும் விர்ரென்று மேலே கிளம்புகின்ற, காட்டையுடைய அத்தலைவனோடு, நாங்கள் ஒன்று கூடியிருந்த அவ்விடத்திலேயே, போய் விட்டது."

"நான் மட்டுந்தான் இங்கேயிருக்கின்றேன். என்னுடைய எலும்பு, நரம்பு, தோல் பொருந்திய உருவம் மட்டும்தான் இங்கே இருக்கின்றது. என்னுடைய அழகு சீர்குலைந்து விட்டது. அவனும் நானும் சந்தித்த இடத்திலேயே சிந்திச் சிதைந்து விட்டது. அவன் என்னை மணந்து கொள்ளாத காரணத்தால் நான் இங்கும், என்னுடைய அழகு அங்குமாக இருக்கும் நிலைமை நேர்ந்து விட்டது" என்று கூறினாள் தலைவி.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்தி ஐந்தாவது பாடலைக் கவனிப்போம்.

இப்பாடல் நெய்தற் காற்கியர் என்னும் புலவரால் பாடப்பட்டது. 'தலைமகன் வேலிக்கு வெளியிலே நிற்கும் போது, 'அவன் மணந்து கொள்ளாவிட்டால் தலைவி இன்னும் சில நாட்கள்தான் உயிர் வாழ்வாள்' என்று தோழி கூறியது. இது நெய்தல்திணை சார்ந்தது.

"மாக்கழி மணிப்பூக் கூம்பத், தூத்திரைப்
பொங்கு பிதிர்த் துவலை யொடுமங்குல் தைஇக்,
கையற வந்த தைவரல் ஊதையொடு,
இன்னா உறையுட் டாகும்
சின்னாட்டு, அம்மஇச் சிறுநல் ஊரே."

தலைமகள் இரவு நேரத்திலே, கொல்லைப் புறத்திலே வேலியோரத்திலே வந்து நிற்கின்றாள். அவன் ஒவ்வொரு நாளும் இரவில் தலைவியைக் காணும் போதெல்லாம் விரைவில் மணந்து கொள்ளுகின்றேன் என்று ஆறுதல் கூறிப் போவான். இவ்வாறு நீண்ட நாட்களாகக் காதல் நாடகம் நடந்து கொண்டிருக்கின்றது.

மழைக் காலம் தொடங்கிவிட்டது. வடக்கிலிருந்து வாடைக் காற்றும் மெதுவாக வீசத்தொடங்கி விட்டது. இன்னும் தலைவன் தன் வாக்குறுதிப்படி தலைவியை மணந்து கொள்ள ஏற்பாடு செய்யவில்லை. இது தலைவியின் உள்ளத்தையும், தோழியின் நெஞ்சத்தையும் உறுத்திக் கொண்டேயிருந்தது.

இன்று அவன் வழக்கம்போல், குறித்த நேரத்தில் கொல்லைப் பக்க வேலியின் புறத்தே வந்து நின்றபோது தலைவி அவனிடம் போகவில்லை. தோழி மட்டும் கொல்லைப்பக்கம் போனாள். தலைவன் வந்து காத்திருப்பதைக் கண்டாள். அவன் உள்ளத்திலே தைக்கும்படி சில உண்மையான மொழிகளை உரைத்தாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

பெரிய நீர்க்கழிகளில் உள்ள நீலமணி போன்ற மலர்கள் குவியும்படி, வெண்மையான அலைகளிலிருந்து, மிகுதியாகச் சிந்துகின்ற நீர்த்துளிகளுடன், மேகத்தைத் தடவிக் கொண்டு, பிரிந்தோர் செயலறும்படி எல்லாவற்றையும் தடவுகின்ற, ஊதைக் காற்றோடும் கூடி, இந்தச் சிறிய நல்ல ஊர், துன்பம் தரும் உறைவிடமாக இருக்கின்ற, சில நாட்களையுடையதாகும்.

இவ்வூரிலே தலைவி நீண்ட நாள் உயிர் வாழமாட்டாள். இன்னும் சில நாட்கள்தான் உயிர் வாழ்வாள். அவள் நிலையாக உயிர் வாழவேண்டுமானால் தலைவன் அவளை இவ்வூதைக் காலம் கழிவதற்கு முன்பே மணந்து கொள்ளவேண்டும் என்று கூறவேண்டிய செய்தியை மேலே குறித்தவாறு சுற்றி வளைத்துச் சொன்னாள். இவ்வாறு தோழி தன் தலைவிக்காகப் பரிந்து பேசிய நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுவதே இப்பாடல்.
இவ்வாறாக இந்தப் பாடல்களில் நட்பின் பெருமை புலப்படுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# மீண்டும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

சமயம் விடுதலைப் புலிகளே தமிழக மீனவர்களைக் கைது செய்தனர். அவர்களை விடுவிக்கப் பெரும் தொகையை நஷ்டஈடாகச் செலுத்த வேண்டியிருந்தது.

இப்போதும் இந்தத் துப்பாக்கிச் சூடு, கைது எல்லாமே இலங்கைப் பகுதியில்தான் நடக்கின்றன. இலங்கைக் கடற்படை ஒருபோதும் இந்தியப் பகுதிக்குள் வருவதில்லை.

இலங்கை மீனவர்களும் கடலை நம்பி இருக்கின்றனர். அவர்களும் பிழைக்க வேண்டும் எனத் தமிழக மீனவர்கள் உணராதவரை எந்த ஒப்பந்தமும் சரிவராது. அவர்களது வாழ்வாதாரத்தை நாம் உறுதிசெய்ய வேண்டும். அடுத்ததாக, பாக் நீரிணையை சர்ச்சைக்குரிய பகுதியாகக் கருதக்கூடாது. இதை இருவருக்கும் பொதுவான பகுதியாகக் கருத வேண்டும். இதை நிர்வகிக்கப் பாக் நீரிணை ஆணையம் என்னும் அமைப்பை உருவாக்க வேண்டும். இந்தியா - இலங்கைக் கடற்பரப்பில் கூட்டு முயற்சியில் மீன்பிடிக்க வேண்டும்" என்று கூறியிருந்தார் வி. சூரியநாராயண்.

ஆனால், கன்னியாகுமரி கடல் பகுதியில் உள்ள 'வாட்ஜ் பாங்க்' (wadge bank) எனும் பெரும் பரப்பை வாங்கவே கச்சதீவை இந்தியா விட்டுக்கொடுத்து என ஒரு புதிய தகவலை பழைய ஆவணங்கள் அடிப்படையில் 'The Print', 'The Hindu' ஆங்கில ஊடகங்கள் வெளியிட்டதும் இந்த மொத்த விவகாரமும் வேறு வடிவம் எடுத்தது.

## இதற்காகத்தான் கச்சதீவை இந்தியா விட்டுக்கொடுத்ததா?



இது தொடர்பாக தமிழக எழுத்தாளரும் வழக்கறிஞருமான இரா. முருகவேள், "அதுதானே, இந்திய ஆளும் வர்க்கம் அதுவும் இந்திரா காந்தி ஆட்சி ஒரு தீவை சும்மா இலங்கைக்கு விட்டுத் தந்துவிடுமா? இதற்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்று தோன்றிக்கொண்டே இருந்தது. இந்தியாவாவது ஒரு தீவை சும்மா விட்டுக் கொடுப்பதாவது;

இந்தியா 1974ஆம் ஆண்டு கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்த பின்பு 1976ஆம் ஆண்டு இலங்கையின் வாட்ஜ் பேங்க் என்ற கன்னியாகுமரிக்கு அருகே உள்ள தீவை இந்தியாவுக்கு விட்டுக் கொடுத்துள்ளது. 282 ஏக்கர் கச்சதீவை கொடுத்து இரண்டு லட்சம் ஏக்கர் (3000 சதுர மைல்) பரப்புக் கொண்ட வாட்ஜ் பேங்க் பகுதியை இந்தியா அடைந்துள்ளது.

வாட்ஜ் பேங்க், கன்னியாகுமரி அருகே கடலுக்குள் உள்ள பிடபூமி. பவளப் பாறை கள், மிக அரிய மீன்கள் போன்ற சிறந்த இயற்கை வளங்கள் கொண்ட பிரதேசம். இந்தியக் கடல் எல்லைக்கு வெளியே உள்ளது. அதை இந்தியப் பகுதியாக இலங்கை அங்கீகரித்தது. அதற்கு முன்பு அது இலங்கைப் பகுதியாகக் கருதப் பட்டது. இந்தத் தீவு ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு ஏற்றது. இயற்கை வளங்கள் கொண்டது. மக்கள் வாழாத கச்சதீவை விட அதிக பயனுள்ளது.

ராஜீவ் காந்தி ஆட்சிவரை இந்தியா விரிவாதிக்கத்தில் ஆர்வம் கொண்டிருந்த துணை வல்லரசுதான். சிக்கிம், இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. பூடான், நேபாளம், இலங்கை என சுற்றிலும் உள்ள சிறிய நாடுகளில் தலையீடுகள் என்று அன்றைய இந்தியா ஒரு முரட்டு அரசாகவே இருந்தது. இன்றைய ஆட்சியாளர்களைவிடப் பல மடங்கு திறமையாகவும் இந்த விவகாரத்தில் இருந்தது" என்கிறார்.

இது தொடர்பாக நம்முடன் பேசிய தமிழ்நாட்டைச் சேர்ந்த வழக்குரைஞர் பிரபு ராஜதுரை, "சொத்துரிமை மாற்று ஆவணங்களின் பெயர்களில் வழக்குரைஞர்களுக்கே சிறிது மயக்கம் இருக்கும். சொத்தின் மதிப்பிற்கு ஈடாக பணம் கொடுத்து வாங்கப்படுவது 'விற்பனை ஆவணம்' (Sale Deed) பணம் பெற்றுக்கொள்ளாமல் அன்பினால் இலவசமாக மாற்றுவது 'நன்கொடை ஆவணம்' (Gift Deed). இருவருக்கிடையேயான சொத்துகளை மாற்றிக்கொள்வது 'பரிமாற்ற ஆவணம்' (Exchange Deed). அண்ணன் _ தங்கை இருவருக்கும் ஒரு சொத்தில் உரிமையிருந்து, அண்ணன் தனக்குள்ள உரிமையை தங்கைக்கு மாற்றம் செய்வது 'விடுதல் ஆவணம்' (Release Deed). இறுதியாக ஒரு சொத்தில் உரிமை உள்ளதோ இல்லையோ, யாருக்கு உரிமை இருக்கிறது என்ற பிரச்சினையில் ஒருவர் உரிமைக்கான தனது கோரிக்கையை மற்றவருக்கு விட்டுக் கொடுத்தல் 'துறத்தல் ஆவணம்' (Relinquishment Deed). கச்சதீவுப் பிரச்சினையில் இந்தியா இலங்கைக்கு அளித்தது, நன்கொடை அல்ல, விடுதலும் அல்ல, மாறாக துறத்தல்.

கச்சதீவு யாருக்கு உரிமைப்பட்டது என்பது, தன்னாட்சி பெற்ற நாடுகளாக இந்தியாவும் இலங்கையும் உருவாவதற்கு முன்பிருந்தே உள்ள பிரச்சினையாகும். எனவே, கச்சதீவை இலங்கைக்கு இந்தியா தாரை வார்க்கவில்லை. (did not cede) மாறாக இந்தியாவின் பல்வேறு ராஜரீக, பாதுகாப்பு, பொருளாதார நலன்களுக்காக ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா துறந்த உரிமைக்கான கோரிக்கை.

மாலைதீவு மக்கள் இந்திய குடிமக்கள் இல்லை. ஆயினும் இந்தியா மாலைதீவிற்கு ஆயுதம் தாங்கிய படகுகளையும் ஹெலிகொப்டர்களையும் தானமாக அளிக்கிறது. இது மாலைதீவிற்கான பாதுகாப்பு என்பதைவிட இந்தியாவின் பாதுகாப்பிற்காக என்பதை விளங்கிக் கொள்ள வெளியுறவுத்துறை அமைச்சரான ஜெய்சங்கர் அளவிற்கு ஐ.எஃப்.எஸ். பட்டம் பெறத் தேவையில்லை. தொடர்ந்து செய்தித்தாள்களைப் படித்தாலே போதுமானது.

தேர்தல் லாபத்திற்காக, இந்தியாவின் பிரத மரும் வெளியுறவுத் துறை அமைச்சரும் கச்சதீவுப் பிரச்சினையை கையிலெடுப்பது மற்ற நாடுகளின் பார்வையில் இந்தியா வின் நம்பகத்தன்மையை குலைக்கவும் இந்திய அரசியல்வாதிகளைக் கேலிப் பொருளாகப் பார்க்கப்படவும் காரணமாக அமையலாம்.

ஒருவகையில் கச்சதீவுப் பிரச்சினை இப்போது கிளப்பப்பட்டது நல்லதுதான். கன்னியாகுமரிக்குத் தெற்கே வாட்ஜ் பேங்க் பகுதி என்ற மீன்வளமும் பெட்ரோலிய சாத்தியங்களும் நிறைந்த பகுதி இருப்பதும், கச்சதீவு ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அந்தப் பகுதியின் மீதான தனது உரிமைக்கான கோரிக்கையை துறந்ததும், ஆங்கில ஊடகங்கள் போட்டுடைத்தில், கச்சதீவு ஒப்பந்தத்தை எதிர்த்து உண்மையில் இலங்கை மக்கள்தாம் போராட வேண்டும் என்று தமிழர்களை நினைக்க வைத்துவிட்டனர்" என்றார்.


வீணைமைந்தனின்

"தொலைந்துபோன வசந்தகாலங்கள்"

(போருக்கு முன்பும் பின்பும் ஒரு ஊரின் கதை)

(2ம் பதிப்பு)

அறிமுகவிழா

கனடிய தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில்

புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளின்

கண்காட்சியும் விற்பனையும்

காலம் - 20.04.2024

காலை - 10.00 மாலை 5.00 மணிவரை

பிரவேசம் இலவசம் அனைவரும் வாருங்கள்

ஆதரவு தாருங்கள்

வாசியுங்கள்! நேசியுங்கள்!

தொடர்புகளுக்கு - 514- 664 3604

416- 732 1606

416- 732 6021

கண்காட்சியில் இடம்பெறும் வீணைமைந்தனின் படைப்புகள்

மன்னும் மனசும்

மறக்கத் தெரியாத மனசு

தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்

நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும்

வாழ்த்தும் வணக்கமும்





யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்

சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 . 724 . 7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, laundry, 1 parking. Close to TTC. Small family / student preferred. Avail. immediately.
**416.857.4338 / 647.332.1580**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.741.5335 / 647.779.5332**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt apt. for rent. No parking. No pets & no smoking. Small family preferred. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.834.1081**

**MARKHAM & LAWRENCE**
2 Bedrooms renovated bsmt for rent. 1 parking. Close to Cedarbrae Mall, TTC, Schools, Banks & etc. Avail. immediately.
**647.780.6500/ 416.289.3685**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.219.4491**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.898.1242**

**MARKHAM & 16TH AVE.**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to go station. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.395.5914**

**TAUNTON & PETER MATTHEWS**
**1** Bedrooms bsmt for rent. 1 parking. Close to all facilities. Avail. immediately.
**647.745.4416/ 647.631.5477**

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.827.3166**

**MIDDLEFIELD & HIGHGLEN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. No pets & no smoking. Vegetarian family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.823.7576**

34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**AUDLEY & ROSELAND (AJAX)**
1 Bedroom walkout bsmt for rent. Sep. laundry & parking. No pets & no smoking. next to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.895.5219**

**SHEPPARD & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, washroom, sep. laundry & parking. 5 min walk to TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.390.8269**

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & parking. Walking distance to TTC. No pets & no smoking. Avail. April 15, 2024.
தொடர்புகளுக்கு: **647.995.2505**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to TTC & Eraa supermarket. Avail. May 1st, 2024.
தொடர்புகளுக்கு: **647.947.3188**

**MORNINGSIDE & COLLINS**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance, parking & sep. laundry . Close to Centenial College. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.274.2390**

**NEILSON & FINCH**
1 Large bedroom + Den bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to TTC. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.205.4579**

**HOOVER PARK DR. & 10TH LINE STOUFFVILLE**
1 Bedroom & 2 washroom bsmt Apt. for rent. Sep. entrance,parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & sep. laundry. close to U of T & TTC. working female preferred. Avail. immediately.
**647.833.3893 /647.637.5345**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Near by Walmart & Amazon. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.728.7582**

**MORNINGSIDE & COLLINS**
2 Bedrooms walk-out bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to Scarborough university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.526.0193**

**MARKHAM & LAWRENCE**
1 Large bedrooms bsmt for rent. Working couple preferred. Avail. immediately.
**647.853.5524/ 416.438.2552**

**MARKHAM & LAWRENCE**
3 bedrooms, 2 washrooms bsmt for rent. Sep.entrance, parking & laundry. Small family/Single preferred. Avail. immediately.
**416.930.5307/ 416.829.0875**

**PORT UNION & KINGSTON**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & kitchen. Students/Couple / small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.3124**

**ROSSBANK & FINCH**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.530.9724**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to all facilities. Couple /Small family preferred. Avail. immediately.
**416.613.1792 / 437.260.6478**

**TAUNTON & HARWOOD AVE. (AJEX)** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to bus, school & supermarket. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.964.1772**

மேலும் பக்கங்கள் 13,14,15

## ROOM FOR RENT

**TAUNTON & PICKERING**
2 Bedrooms for rent in a new house main floor. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.203.8774 / 647.467.1622**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom with attached washroom for rent in a house. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.532.6841**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Room for rent in a house. Studying /working female preferred. Close to TTC & Eraa supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.947.3188**

**KENNEDY & HWY 401**
1 Bedroom for rent in a condo. 1 Washroom & 1 parking, Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

**9TH LINE & 14TH AVENUE**
Room for rent. Parking, laundry & internet. Close to YRT & all other facilities. Avail. May 01, 2024.
**416.648.1987 / 416.669.3549**

**MIDDLEFIELD & STEELES**
**1** Bedroom for rent in a bsmt. Shared washroom & kitchen. 3 Min. walk to TTC & Tamil shops. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.894.4675**

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedrooms for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & internet. Avail. immediately.
**647.802.1599 / 647.963.2397**

**MARKHAM & DENISON**
1 Large bedroom for rent. Attached washroom. 2 Male preferred. Rent $1400. No alcohol, no smoking & no pets. Avail. immediately.
**647.507.2148/647.864.1051**

**MCCOWAN & FINCH**
1 Bedroom in a condo. Sharing washroom, kitchen, laundry, wifi & utilities incl. Female only.
தொடர்புகளுக்கு: **647.677.9369**

**MORNINGSIDE & FINCH**
2 Big rooms are available in the main floor (Detached house) for rent. Female / couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.580.6205**

# ROOM FOR RENT

**WARDEN & FINCH**
Room for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in a main floor. No Parking. Couple or female preferred. Avail. immediately.
**416.875.4257 / 647.874.8393**

**BRIMLEY & STEELES**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking & laundry. Close to TTC. Student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

**MARKHAM & STEELES**
1 Room for rent in upstairs. Utilities, cable & internet included. Single working ladies preferred. Close to TTC & etc. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom for rent in a bsmt. Shared washroom. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**MIDDLEFIELD & ELSON**
1 Bedroom for rent in a bsmt. Shared washroom. 2 Male preferred. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **: 416.388.2401**

**TAPSCOTT & CROW TRAIL**
1 Bedroom for 2 girls for rent. Shared kitchen & washroom. Avail. immediately.
**Pls. Call / Text: 647.532.9924**

**MCCOWAN & DENISON**
1 Room for rent in a house. 1 Parking. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

## BASEMENT FOR RENT

**SALEM & GILLET (Ajax)**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1parking & laundry. Close to school, HWY 401 & all other facilities. Small family/students/ couple preferred. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.809.3251**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

**BROCK & WHITEVALE**
4 Bedrooms house for rent. 2 Parking. Avail. immediately.
**647.878.3342 / 647.613.2581**

**MORNINGSIDE & NEILSON**
4 Bedrooms house & finished bsmt for rent. 4 Washrooms. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.556.4881**

## APARTMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
1 Bedroom apartment for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647. 763.2760**

## CONDO. FOR RENT

**MARKHAM & SHEPPARD**
1 + Den Condo. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.556.4881**

## BASEMENT FOR RENT

**WARDEN & ELLESMERE**
3 Bedrooms bsmt for rent. 2 Wash rooms, sep.entrance, parking & laundry. Small family/students preferred. Close to bus stop & HWY 401 & 404. Avail. May (1st week), 2024.
தொடர்புகளுக்கு: **416.770.0178**

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
Brand new 1 large bedroom bsmt for rent. Sep.entrance, 1 parking, laundry, new gas stove & large window. Young couple / student preferred. Avail. immediately.
**416.285.0249/ 416.509.4599**

## BASEMENT FOR RENT

**MORRISH & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking & sep. laundry. Close to library, schools & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & utilities. Close to all facilities. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.358.9747**

மேலும் பக்கங்கள் 12,14,15

## ROOM FOR RENT

**BRIMLEY & EGLINTON**
1 Large Bedroom for 2 people with attached washroom for rent in a bsmt. Sep. entrance & utilities included. In front of TTC stop. 5 min walk to groceries. Non smokers & working people only. Avail. immediately.
**Pls. call – 416.268.5014**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Close to TTC & all other facilities. Couple preferred. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.722.5519**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & HWY 401**
2 Bedrooms bsmt for rent. Washroom, kitchen, living room & 1 parking. Rent includes all utility costs & wifi. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.802.9040**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance, laundry. Close to HWY 401 & all amenities. Student preferred. No pets & no smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.210.6556**

## BASEMENT FOR RENT

**MARKHAM & BUR OAK**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, living room, sep. laundry & parking. Close to Mount joy go station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.669.8711**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance & 2 parking. Close to walmart, Costco & school. Very convenient location. No smoking & no pets. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.761.5599**

## BASEMENT FOR RENT

**BROCK ROAD & HWY 401 (PICKERING)**
Newly renovated 2 bedrooms walkout bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. No pets. Close to bus service & all shopping stores. Avail. immediately.
**416.474.8053/905.554.4913**

## HOUSE FOR RENT

**MIDLAND & STEELES**
3 Bedrooms bungalow house for rent. 1 Bedroom also avail able. Close to TTC & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.908.6810**

## ROOM FOR RENT

**NEILSON & MCLEVIN**
1 Bedroom for rent in a bsmt. Shared kitchen & sep. washroom. Couple preferred. Walking distance to bus stop, mall & etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom for rent in a town house. Shared washroom, 1 parking & internet. Working ladies only. Close to bus stop & all facilities. Avail. immediately.
**416.579.2251/647.323.3767**

## ROOM FOR RENT

**WARDEN & ELLESMERE**
1 Shared large bedroom for rent in a bsmt. Parking available. Male preferred. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.569.0657**

## ROOM FOR RENT

**KIPLING & REXDALE**
1 Bedroom for rent in a basement. Sep. entrance, rent includes utilities & high internet, parking & laundry. Close to TTC. No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.407.1778**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms for rent. 1 Large room attached double sink washroom & double closet. Close to all facilities. Ladies /young family preferred. Avail. immediately.
**416.848.9697/647.888.9437**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & HIGHGLEN**
சந்திப்புக்கு அருகாமையில் வீட்டின் மேல்தளத்தில் ஓர் அறை வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **647.389.7120**

## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Units**
***647-861-8240***

## HOUSE FOR RENT
**WARDEN & ELLESMERE**
3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/working people preferred. Close to TTC & all facilities. Avail. June 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.770.0178**

## BASEMENT & ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Also 1 Large bedroom with attached washroom for rent in the main floor. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.972.3710**

## HOUSE FOR RENT
**PHARMACY & LAWRENCE**
3 + 3 Bedrooms full bangalow house for rent. 2 full washrooms & 4 parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.5420**

## ROOM FOR RENT
**KENNEDY & MAYFIELD (BRAMPTON)**
2 Bedrooms for rent in a 2nd floor. Shared washroom & 1 parking. Close to all amenities. Avail. immediately
Contact: **647.529.9735**

## HOUSE FOR RENT
**HWY 407 & DONALD COUSEN'S**
2 Bedrooms coach house for rent. Close to HWY 407, GO Station & other facilities. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.862.7056**

## HOUSE FOR RENT
**LINDSAY ONTARIO**
3 Bedrooms house for rent. Close to all facilities. Avail. June 01, 2024.
**647.231.9577/ 647.236.9577**

## CLEANING வேலை
வீடுகளில் வந்து **Cleaning** மற்றும் சமையல் வேலைகள் சிறப்பாகச் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.271.1727**

## ROOM FOR RENT
**HWY 7 & 9TH LINE**
3 Bedrooms for rent in a 2 story house. Living room, kitchen & packing available. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.560.4152**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
2 bedrooms, 1 washroom two story Town house for rent. Private terrace, parking & sep. laundry. Close to all major super markets & HWY 401. 1 min. walk to TTC. Avail. May 01, 2024.
**416.832.0982 / 647.785.3046**

## BAKERY வேலைக்கு ஆள் தேவை
**MORNINGSIDE & SHEPPARD**
பகுதியில் அமைந்துள்ள Bakery ஒன்றிற்கு Srilankan Bakery வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: **647.262.6616**

## தையல் வேலைக்கு ஆள் தேவை
**MARKHAM & SHEPPARD**
பகுதியில் அமைந்துள்ள தையல் கடைக்கு ஆண் / பெண் தையல் அனுபவமுள்ள வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு: **647.521.8022**

## ROOM FOR RENT
**MARKHAM & ELLESMERE**
**Bangalow house**இல் அறை உடனடியாக சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. முதியோர் மட்டும். மற்றும் **BSMT** இல் அறை ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

## HOUSE & BASEMENT FOR RENT
**BIRCHMOUNT & ST.CLAIR**
3 Bedrooms in the main floor & 1 Bedroom in the bsmt. Sep. entrance, 3 parking. Close to School, Temple, Supermarket & Warden Subway. Avail. June 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.268.8855**

## மணமகன் தேவை
கனடாவில் வாழும் Roman catholic 39 வயதான **(Graduated in Medical office Administration)** பெண்ணுக்கு மணமாகாத 39 - 42 வயதுள்ள Roman catholic மணமகனைத் தேடுகிறோம்.
**416.551.9737/ 647.937.1243**

## JOB VACANCY
**CHILD CAREGIVER / HOME CARE** – Full time / Part time
**LOCATION – MARKHAM**
If you're interested, please contact for more details.
**416.918.9848/416.857.7603**

## BASEMENT & ROOM FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom bsmt for rent. Laundry & parking. couple preferred. 1 Bedroom for rent in a main floor. working people / student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.261.3482**

## HOUSE FOR RENT
**BRIMLEY & LAWRENCE**
3 Bedrooms bungalow house for rent in a beautiful quiet place. 2 Min. walk to Thomson Memorial Park & bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.923.1391**

## வீடு, காணி விற்பனைக்கு
வவுனியாவில் A9 பாதைக்கு அருகாமையில் சேமமடு வீதியில் 1 1/2 ஏக்கர் (1 ஏக்கர் மேட்டுக்காணி, 1/2 ஏக்கர் வயல்காணி) 4 அறையுடன் கூடிய வீடு, காணி விற்பனைக்குண்டு. கிணறு, மோட்டர் வசதி உண்டு.
கிருஸ்ணா: **077.615.0279**

## WORKER தேவை
**KITCHEN CABINET**
வேலைக்கு ஆள் தேவை.
**Location: MARKHAM & PROGRESS**
**Cutting & Assemble** செய்வதில் 2 வருட அனுபவம் தேவை
தொடர்புகளுக்கு: **647.514.0431**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & SHEPPARD**
4 Bedrooms house for rent & 1 Bedroom basement for rent. 3 Parking available. Avail. immediately
**647.606.8994/416.388.2794**

## HOUSE FOR RENT
யாழ்ப்பாணம் பலாலி பிரதான வீதி, புன்னாலைக்கட்டுவனில் 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **416.420.9394**

## HOUSE FOR RENT
**MARKHAM & STEELES**
3 Bedrooms & 2 1/2 washrooms house for rent. Parking available. Close to all facilities. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.529.2190**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & HIGHGLEN**
4 Bedrooms house for rent. Avail. June1st 2024. 2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Avail. May 1st, 2024. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **905.471.7667**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
Contact: **647.686.8590**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SEWLLES**
**Multiple bedrooms available with bathroom & kitchen.**
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.
**Close to TTC (2 Buses). Contact owner about renting price.**
தொடர்புகளுக்கு: **416.908.9494**

## NEW CONDO. FOR RENT / SALE

**DOWNTOWN**

Brand new 1 bedroom + Den with 1 bathroom Broccolini builder condo. for rent / assignment sale. Balcony, living room & kitchen. Avail. immediately.

**416.918.9848/416.857.7603**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME / PART TIME

**CHEF, LINE COOK & BREAKFAST COOK**

**GERRARD & COXWELL** இல் அமைந்துள்ள **Canadian Restaurant** ஒன்றிற்கு **Chef, line Cook & Breakfast cook** போன்ற வேலைகளிற்கு குறைந்தது 5 வருட அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு:

**Call : 416.220.9179 / Email: chadsenagroup@gmail.com**

## CONDO & HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE** – 2 Bedrooms Condo. for rent. 2 washroom,1 parking. Avail. immediately.

**OSHAWA** - 4 Bedrooms detached house for rent. 2 washrooms, 3 parking. Close to University & other facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.

**PETERBOROUGH** - 4 Bedrooms detached house for rent. 2 washrooms, 3 parking, Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.702.2159**

## நீங்களும் முதலாளியாக விருப்பமா? *ZERO TO HERO*

உங்களுக்கு அனுபவமான துறையில் சொந்தமாக வியாபாரம் ஆரம்பிக்க ஆர்வம் இருந்தால் .... அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்

* வங்கிக்கடன் ***(Loan)*** * ***Partnership***

* அறிவுரை ***(Consultation)***

அழையுங்கள் – சத்தி - **647.838.2378**

## JOB JOB JOB

**Line cook and Breakfast cook needed (full time) with experience for a busy restaurant – OakSide Bar & Lounge in Markham, Stouffville. Immediate positions available.**

**Line cook & Breakfast cook** போன்ற வேலைகளுக்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம். **Good Pay & Benefits available**

தொடர்புகளுக்கு: **647.406.2405**

## OFFICE SPACE FOR RENT

**BRAMPTON (MAIN & QUEEN)**

Around 500 to 2000 sq. ft spacious office space available for rent in Brampton. Great place for meetings, network, conferences & etc. Very close to Algoma University, Rose Theater, all major banks & food court. Walk out to Garden Square. Suitable for professional offices & classrooms /educational institution.

**416.918.9848/416.857.7603**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள்
12, 13,14

விலைமதிப்பற்றி செல்வம் அறிவு பலமான ஆயுதம் பொறுமை மிகச்சிறந்த பாதுகாப்பு உண்மை அற்புதமான மருந்து சிரிப்பு

## wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Mississauga*** – Dundas Street/Wolfdale Road- Basement
(2Brm + 1Bath + 1 Parking) **[$2100/month]**

***Clarington*** -_ Port Darlingtonrd &Bennette Rd- Full house
(3Brm + 3Bath + 2 Parking) **[$2800/month]**

***Pickering*** – Brock & Whitevale - Basement
(2Brm + 1Bath + 1 Parking) **[$2000/month]**

***Oshawa*** – Harmony/ Olive – Basement
(1Brm + 1Bath + 1 parking) **[$1450.00/month)**

**Scarborough** - Mccowan & Lawrence - Full House
(2Brm + 2Bath) + 2 Kitchen **[$3,900/month]**

***Scarborough*** – Mccowan & Lawrence– Basement
(2Brm + 1Bath) **[$2,400 with utilities / month)**

**Available for Rent**

***Pickering*** – Whitevale Rd/Mulberry Lane - Detached
(4Brm + 4Bath) **[$3,400/m]**

***Whitby*** – Country Lane & Southwell Ave Basement
(2Brm + 1Bath) **[$1600/month]**

***Mississauga***– Confederation / Burnhamthope -Condo
(1Brm + 1Bath) **[$2600/month]**

*Oshawa* – Simcoe St N/Adelaide Ave E – Bungalow
(3Brm + 2Bath) **[$2,600/m]**

***Porthope*** – Walton St/Ontario St– Apartment
(2Brm + 1Bath) **[$1,999/month]**

***Scarborough*** – Kingston Rd & Eglinton Ave E–Condo
(1 Brm +1Bath + 2 parking) **[$ 2500/month]**

### BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

**We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**

# கனடாவில் சூரியனைத் தேடிய பயணம்




கனடாவில் பனிக்காலத்தில் சூரியனைக் காண்பது என்பது அரிதாகவே இருக்கும். வெளியே வெய்யில் எறிப்பதுபோல இருந்தாலும், வெளியே சென்றால் சிலசமயம் கடும் குளிராகவும் இருக்கும். காலநிலை காரணமாக இம்முறை கனடாவில் பனி கொட்டுவது மிகக் குறைவாகவே இருந்தது. வழமைபோல ஆய்வாளர்கள் பல காரணங்கள் சொன்னாலும், இந்த மாற்றத்திற்கு எல் நினோ (El Nino) என்ற பசுபிக்சமுத்திர நீரோட்டமும் ஒரு காரணமாக இருந்தது. சில வருடங்களுக்கு ஒருமுறை டிசெம்பர் மாதத்தில் எல் நினோவின் இதுபோன்ற பாதிப்பை எங்களால் இங்கே அவதானிக்க முடிகிறது.

ஏப்ரல் 8ஆம் திகதி சூரிய கிரகணம் நடக்கப் போவதாகவும், வட அமெரிக்காவில் அதை முழுமையாகப் பார்க்க முடியும் என்றும் ஊடகங்கள் பல செய்திகளை வெளியிட்டிருந்தன. சூரிய கிரகணம் என்பது ஒரு சிறப்பு வானியல் நிகழ்வாக இருக்கின்றது. சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது இத்தகைய நிலை ஏற்படுகிறது. முக்கியமாக சூரியன் மற்றும் பூமிக்கு இடையே ஒரே நேர்கோட்டில் சந்திரன் வரும்போது சூரிய கிரகணமும், இவற்றுக்கு நடுவே ஒரே நேர்கோட்டில் பூமி வரும்போது சந்திர கிரகணமும் ஏற்படுகிறது.

அனேகமான கனடியர்கள் போலவே நாங்களும் இதற்கான ஆயத்தங்களைச்




செய்திருந்தோம். சூரியனைப் பார்ப்பதற்கான விசேட கண்ணாடி, நிகழ்வைப் படம் பிடிப்பதற்கான கமெரா எல்லாம் தயாராக வைத்திருந்தோம். நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதிதான் இதற்குச் சிறந்த இடம் என்று ஊடகங்கள் தெரிவித்திருந்தன. பிள்ளைகளும் எங்களுடன் வந்ததால், நாங்களும் அங்குதான் போவதாக இருந்தோம். அதே நேரம் கூட்டத்தைச் சமாளிக்க அனேகமான வீதிகளின் போக்குவரத்தைத் தற்காலிகமாக மூடப்போவதாக நயாகரா பொலீஸார் அறிவித்திருந்தனர்.

பிள்ளைகள் பாடசாலையால் திரும்பி வீட்டுக்குப் போகும் நேரம்தான் இங்கே கிரகணம் என்பதால், அவர்கள் அதற்கான கண்ணாடி இல்லாமல் நேரடியாகப் பார்த்து விடுவர் என்ற பயம் காரணமாக முன்எச்சரிக்கையோடு அன்று பாடசாலைகள் முடப்பட்டிருந்தன.

எதிர்பாராதவிதமாக அன்று ரொறொன்ரோ கருமேகத்தால் மூடப்பட்டிருந்தது. நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதியிலும் முகிற் கூட்டங்கள் நிறைந்திருப்பதாகவும், தெளிவாகப் பார்க்க முடியாமல் போகலாம் என்ற செய்தியும் வந்தது. எனவே நாங்கள் பயணத்தின் திசையை மாற்றியிருந்தோம். தெற்கு நோக்கிப் போகாமல் மேற்கு நோக்கிக் ஹமில்டன் பகுதிக்குச் சென்றோம். அங்கே வானம் தெளிவாக இருந்தது. ஆனால் ஒரு நிமிடமும் 50 விநாடிகளும்தான் இதைப் பார்க்க முடியும் என்பது தெரியவந்தது. எனவே அங்கிருந்து இன்னும் சற்று தெற்கே உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றோம். அங்கே வீதி ஓரங்களில் வண்டிகளை விட்டுவிட்டு மக்கள் கண்ணாடிகளோடும், கமெராக்களோடும் நிறைந்திருந்தனர். அங்கு வானம் இன்னும் தெளிவாக இருந்ததால், சுமார் இரண்டு நிமிடங்கள் வரை முழுக்கிரகணத்தையும் எங்களால் பார்க்கக்கூடியதாக இருந்தது.

சுமார் 3:15 மணியளவில் சந்திரன் சூரியனை மறைக்கத் தொடங்கியது. முழுக்கிரகணம் வந்தபோது தெற்கே வானம் ஒரேஞ்ச் (Orange) நிறமாக மாறியிருந்தது. தெருவிளக்குகள் சட்டென்று எரியத் தொடங்கின. இருட்டினால் தானியங்கியாகவே எரியக்கூடிய தெரு விளக்குகள் என்பதுதான் காரணம். திகைப்படைந்த பறவைகள் எல்லாம் கூடு நோக்கிப் பறக்கத் தொடங்கியிருந்தன. எல்லோரும் கண்ணாடியை எடுத்துவிட்டு, வெள்ளி மோதிரம் போலத் தெரிந்த சூரியனை நேரடியாகவே பார்த்தனர். எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது. எங்கள் வாழ்நாளில் பூமியில் இருந்து சூரியனை வெறுங்கண்ணால் நேரடியாகப் பார்க்கலாம் என்று நினைத்தும் பார்த்திருக்க மாட்டோம். அப்படி ஒரு சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்தது.

வண்டியில் போகும்போது இதைப்பற்றி உரையாடிக் கொண்டு சென்றோம். அப்போது ஆறு வயதுடைய ஒரு பிள்ளை "சந்திரன் இரவில்தானே வரும், இன்று மட்டும் ஏன் பகலில் வருகின்றது" என்று கேட்டது. அறிவியல் சார்ந்த கேள்வி என்பதால், "சந்திரன் பகலிலும் வருகிறது, ஆனால் பகலில் சூரிய வெளிச்சத்தால் அது மறைக்கப்பட்டு விடுகின்றது" என்று



விளக்கம் கொடுத்தேன்.

1972ஆம் ஆண்டு இதேபோல கிரகணம் நடந்தது. இனி 80 வருடங்களின்பின், அதாவது 2106ஆம் ஆண்டுதான் இதேபோன்ற முழுகிரகணத்தைப் பார்க்க முடியும். ஒரேயொரு ஏக்கம் என்னவென்றால், அடுத்த தலைமுறைக்குத்தான் இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது. அடுத்த தலைமுறையினர் இந்தப் பேப்பர் கட்டிங்கைக் கவனமாகப் பாதுகாத்தால், ஒரு காலத்தில் "என்னுடைய பூட்டன் முழுக்கிரகணத்தையும் நேரடியாகப் பார்த்திருக்கிறார்" என்றாவது அவர்கள் பெருமையுடன் பீற்றிக் கொள்ளலாம்.










# நட்பிற்கோர் பரந்தாமன் – 1951 – 2024




"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்நீர பேதையார் நட்பு" - 'திருக்குறள்'

அதாவது நல்வர்களுடைய சினேகம் பிறைச்சந்திரன்போல நாளுக்குநாள் வளரும், மூடர்களுடைய நட்பு பூரண சந்திரன் தேய்வதைப்போல நாள்பட நாள்பட இல்லாமல் போய்விடும்.

பிறை நிலவு வளர்வதுபோல்தான் எங்கள் இருவர்க்குமிடையே நட்பு வளர்ந்து இறுதிவரை இறுக்கமாயிற்று.

யார் இந்தப் பரந்தாமன்!

"பரந்தாமா திரும்பிப்பார்! இங்கேயல்ல; நீ நடந்துவந்த பாதையிலே;" எனக் கலைஞர் மு. கருணாநிதி வசனம் எழுதிய 'திரும்பிப்பார்' நாயகன் பரந்தாமனை நினைவூட்டுவதுபோல அவரிடம் பழக ஆரம்பித்த காலங்களில் நான் அவரைக் கலாய்ப்பதுண்டு!

ஆம்! நாங்கள் இருவரும் நடிகர் திலகத்தின் தீவிர இரசிகர்களானபடியால் தான் எங்களுக்கிடையே வளர்பிறைபோல நட்பு வளர்ந்தது, பூரணமானது!

மாவை திரு. திருமதி. முருகையா தம்பதி களின் மைந்தர்களுள் இளையவர். காங்கேசன்துறை, நடேஸ்வரா கல்லூரியில் ஆசிரியராகப் (ஓவியம் வரைதல்) பணிபுரிந்த மாவை புண்ணியமூர்த்தி அவர்களின் மருமகன். பிரபல மாவை நாயனக்கலைஞர் அமரர். உருத்திராபதி ஐயா வீட்டு மாப்பிள்ளையுமாவார். கலைஞர் உருத்திராபதியின் மகள் வயிற்று பேத்தியாரான ஸ்ரீமதி. தனபாலினி இவருடைய இல்லத்தரசி. அவரும் ஓர் இசை வாத்தியக் கலைஞரும், இசை ஆசிரியையுமாவார். நாடறிந்த கவிஞர் உ. சேரன் கூட இவரது நெருங்கிய உறவினராவார். ஆக, கலா ரசனை மிகுந்த பாரம்பரியம் மிக்க தோழர் பரந்தாமனின் நட்பு எனக்கு வாய்த்ததில் எப்போதும் பெருமையே ஆகும்.

அப்போது நான் அறுபதுகளின் மத்தியில் காங்கேசன்துறையூரின் புகழ் பெற்ற வைத்தியர் டாக்டர்.தி. இராஜேந்திராவின் ஈஸ்வரி நர்சிங் ஹோமில் மருந்து கலவை யாளராகப் (கம்பவுண்டர் _ ஒடலி) பணி புரிந்து வந்தேன்.

மாலை நேரங்களில் குமுதம் வார இதழோடு என்னைச் சந்திக்க வருவார். என்னைத்தேடி பல சிவாஜி இரசிகர்கள் வந்த காலமது. அதில் மிகவும் முக்கியமானவர் நண்பர் பரந்தாமன்.

முதல்நாள் தான் பார்த்த சினிமா பற்றி விமர்சனம் செய்வார். அது சிவாஜி படமாக இல்லாவிடினும் உரையாடல் நடுவே சிவாஜியை நினைவூட்டுவார். இது சிவாஜிக்கு வரவேண்டிய கதாபாத்திரம், நடித்தவர் சொதப்பிவிட்டார் என்று அங்கலாய்ப்பார்.

தென்னிந்திய திரையுலகம், கோடாம் பாக்கம் பற்றிய புதினங்கள் கிசுகிசுக் களை நகைச்சுவையுடன் கூறுவார்.

குமுதம், விகடன் திரைவிமர்சனங்களை அலசுவோம். இப்படித்தான் எங்கள் இருவர்க்கிடையிலான நட்பு வளர்ந்தது, இறுக்கமானது.
1978இற்குப்பின் அவருடனான தொடர்பு விட்டுப்போயிற்று. காரணம் நான் ஈரான் நாட்டிற்குப் போய்விட்டேன் - திரவியம் தேடுவதற்கு. நண்பரும் சிங்கப்பூர் சென்று விட்டதாக அறிந்தேன்.



90களில் அவர் கனடாவிற்குக் குடி பெயர்ந்தார். எதேச்சையாக ஒருநாள் ரொறொன்ரோ கென்னடி சப்வேயில் சந்தித்து பிரமிப்புக்குள்ளானேன். மகிழ்ச்சி யில் மூழ்கினேன். மீண்டும் பழைய நட்பு பலம்பெற்றது. புதிசானது!

ரொறொன்ரோ நகரில் பிரபலமான 'விளம்பரம்' இதழின் நிறுவனர் திரு. ராஜா மகேந்திரன் அவர்களை எனக்கு அறிமுகம் செய்து அவரது இதழில் என்னை எழுத வைத்தார். பரந்தாமன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய 'விளம்பரம்' பத்திரிகையின் குழுமம் சார்பில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நடிகர் திலகத்தின் கலையுலகப் புதினங்களை 'நான் வாழப் போகிறேன்' எனும் தலைப்பில் விளம்பரம் இதழில் இரண்டு வருடங்கள் எழுதினேன். இத்தொடர் நவீனம்தான். சென்னை மணிமேகலை பிரசுரத்தினால் 2022இல் வெளியான 'நடிகர் திலகமும் தமிழ் சினிமாவும்' நூலாகும்.

தமிழும் சிவாஜியும் மீண்டும் எங்களை குஷிப்படுத்தியது. தோழரும் 'விளம்பரம்' இதழில் தமிழ் சினிமா பற்றிய வெவ்வேறு புதினங்களை அவ்வப்போது எழுதி வந்தார்.

அவர்மீது காலன் கவனம் செலுத்த ஆரம்பித்தான். காலக்கணிதம் எங்கள் கையில் இல்லை. ஏனென்று சொல்ல முடியாத, விளக்க முடியாத, வைத்தியர் களுக்கும் புரியாத வலிகளை, வேதனைகளை அவரது மனதிலும், உடலிலும் புகவைத்து வேடிக்கை பார்த்தான் காலன்.

எங்கள் இருவருக்கும் நெருக்கமான மூன்றாவது நண்பரான 'பரம் ஜி' என்னைத் தொலைபேசியில் அழைத்து நண்பன் பரந்தாமனின் நிரந்தரப்பிரிவு பற்றி அறியத் தந்தபோது நட்பு என்ற அந்த பௌர்ணமி நிலவு ஒளியிழந்து மறைந்து போனது மிகவும் கவலைகொள்ள வைத்தது.

அவருடனான உரையாடல்களும், விமர்சனங்களும், யாரையும் நோக வைக்காத சொல்லாடல்களும் என்றும் என் நெஞ்சில் ஆயுள் உள்ளவரை நீங்காமல் நிலைத்திருக்கும்.

நீங்கா நினைவுகளுடன்
வீணை மைந்தன்

# மறைந்த எழுத்தாளர் பத்மா சோமகாந்தன்




கனடாவிற்கு உதயன் விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த சோமகாந்தன் தம்பதியினர் இங்கு இரண்டு மாதங்கள் வரை தங்கியிருந்தனர். திருமதி பத்மா சோமகாந்தன் அவர்கள் இங்குள்ள ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. திருமதி சோமகாந்தன் அவர்கள் பெண்ணியவாதியாக பெண்கள் விடுதலைக்காகப் போராடி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1954ஆம் ஆண்டு தொடக்கம் அவர் எழுத்துலகில் பிரவேசித்து சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளார் எனினும் அவரது பார்வை சமுதாயத்தில் அடக்கப்பட்ட மக்கள்மீதே உள்ளது என்பது அவரது செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன. இவர் எழுதிய முதலாவது சிறுகதைக்கு முதலாவது பரிசு கிடைத்தது. ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய இவருக்குப் பல உயர் பதவிகள் தேடி வந்தன. எனினும் அவற்றை ஏற்க மறுத்துள்ளார். ஈழத்து மாண்புறு மகளி 25 பேரில் தங்கம்மா அப்பாக்குட்டி, கோகிலா மகேந்திரன் போன்றோரின் வரிசையில் இவரும் இன்று முன்னணியில் உள்ள ஓர் எழுத்தாளராவார். பெண்களுக்கான கல்வி மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்றார். பெண்களின் குரல் என்னும் சஞ்சிகைக்குப் பொறுப்பாகவிருந்து அது வெளிவர ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். வீரகேசரியில் பெண்கள், இளம் பிள்ளைகளுக்கான வழிமுறைகள் பற்றிய கட்டுரையினை பத்மா என்னும் பெயரோடு புதன்தோறும் எழுதி வருகின்றார். "கடவுளின் பூக்கள்" என்னும் கதைக்கு வில்வ தேவசிகாமணி பரிசு 1994இல் இவருக்குக் கிடைத்தது. 1997இல் இவர் எழுதிய பெண்ணியம் சார்ந்த "புதிய வார்ப்புக்கள்" என்னும் நூலுக்கு மார்க்கா பரிசில் கிடைத்தது. இவர் எழுதிய "வெள்ளி மலர்கள்" எனும் கதைக்கு இந்து பத்திரிகை விதந்துரை செய்தமை குறிப்பிடத்தக்கது. இன்றும் தமிழ் பாடவிதான ஆலோசகராகக் கடமையாற்றி வருகின்றார். ஆசிரியர்களுக்கு விரிவுரைகளும் செய்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## கனடாவில்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

அவரை 'Six Star Driver' எனக் கருதி மலிவான விலையில் காப்புறுதி கிடைக்கும்.

எனவே வாகனக் காப்புறுதிக்கு கனடாவில் மனு செய்யும்போது எவற்றினையும் மறைக்க முடியாது. உண்மையாக, நேர்மையாக, அதற்கு அப்பால் அதி உச்ச விசுவாசமாக தகவல்களை வழங்கி, சட்டங்களை அனுசரித்து காப்புறுதிகளில் சேரும்போது காப்புறுதி என்றும் கைவிடாது என்பது காப்புறுதி கோட்பாடுகளின் தத்துவமாகும்.

# கப்டன் மில்லர்– திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

தனுஷ் நடிப்பில் கப்டன் மில்லர் (Captain Miller) திரைப்படம் 2024 பொங்கல் அன்று வெளி யானது. இதில் அவர் அனலீசன் என்ற பெயரில், ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் வாழும் கிராமத்தவராக நடித்துள்ளார்.

இக்கற்பனைக் கதையில் ஈசன் தனது தாயுடன் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வருகிறார். அண்ணன் செஞ்கோலன் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டம் செய்யும் குழுவில் சேர்ந்து வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

அவர்களது கிராமம் மகாராஜா ஒருவரால் ஆளப்பட்டு வருகிறது. அவர்கள் கட்டிய கோயில் கிராமத்தினுள் இருந்தாலும் கிராமத்தவர்களுக்கு அதனுள் செல்ல அனுமதி இல்லை. மகாராஜாவும் ஆங்கில அரசிற்குப் பணிந்து ஆட்சி செய்கிறார்.

தனது தாயின் இறப்பிற்குப் பின்னர் தனியாக வாழும் ஈசன், தனது கிராமத்தில் மரியாதையைப்பெற முடியாததால், ஆங்கிலேய இராணுவத்தில் சேர திட்டமிடு கிறார். ஆங்கிலேயர் தமது வீரர்களுக்கு ஆடை, பதவி போன்றவற்றை வழங்கி அவர்களுக்கு மரியாதை காட்டுகின்றனர்



என ஈசன் எண்ணுகிறார். எனவே, அவரும் தனது அண்ணனின் கொள்கைக்கு எதிராக ஆங்கில இராணுவத்தில் சேருகிறார். அதில் அவர் விரும்பும் மரியாதையை பெறுகிறாரா இல்லையா என்பதை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படம் கற்பனைக்கதை என்றாலும், ஏன் ஓர் இந்தியன் தம்மை ஆளும் ஆங்கிலேய இராணுவத்தில் சேருவார் என்ற ஒரு விளக்கத்தைத் தந்துள்ளது. ஆங்கிலேயரின் அநியாயங்களும் ஈசன் கிராமத்தில் படும் கஷ்டங்களும் ஓரளவு ஒப்பிடப்படுகின்றன.



அத்துடன் அக்காலப் பெண்கள் சுயமாக சிந்திப்பவர்களாகவும் இப்படம் காட்டுகிறது. இராஜாவின் அண்ணனின் மகள் வேல்மதி, விடுதலைப் போராளி தேன்பாசியார் போன்ற கதாபாத்திரங்கள் காதல் காட்சிகளுக்கு என்று இல்லாமல் கதையில் இடம்பெறுகின்றனர். அவர்களது காட்சிகள் குறைவாக இருந்தாலும், நடிப்பு நன்றாக இருக்கிறது. இவர்களுக்கு சற்று அதிக காட்சிகள் கொடுத்திருக்கலாம்.

இப்படம் ஒரு கதையுடன் தொடங் குகிறது. முற்காலத்தில் ஊரைக் காத்த ஒரு வீரன் எவ்வாறு படத்தின் காலத்தில் ஒரு காவல் தெய்வமாக வழிபட்டு வருகிறார் எனக் கூறப்படுகிறது. இக்கதைக் கும், ஈசனின் கதைக்கும் எவ்வாறு தொடர்பு ஏற்படுகிறது எனப்படம் காட்டுகிறது.

இவ்வாறு சுவராஸ்யமான விடயங்களைக் காட்டும் படம் அவற்றை ஆழமாகக் காட்டாமல், ஈசனை கொடூரமாகப் பழி வாங்கும் ஒரு கதாநாயகனாகக் காட்டு கிறது. எனவே வன்முறையை மட்டுமே காட்டுவதை குறிக்கோளாகக் கொள்ளா மல் கதையையும், கதா பாத்திரங்களை யும் முக்கியமாகக் காட்டியிருந்தால் படம் இன்னும் நன்றாக இருந்திருக்கும். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தைச் சார்ந்த படங்களைப் பார்க்க விரும்புவோருக்கு சண்டைக் காட்சிகளும் பிடித்தால் இப்படத்தைப் பார்க்கலாம்.

---

# தோல்வியும் தோற்றுப் போதலும்

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:

**www.timelesstoday.com**

**www.premrawat.com**

## *Fail and Failure*

தோல்வியை தோற்றுப் போதலுடன் இணைத்துப் பார்க்க வேண்டாம். எப்பொழுது நாம் தோல்விக்கும் தோற்றுப் போதலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்கிறோமோ அப்போது நடைபெறும் உருமாற்றத்தைப் பற்றிப் பிரேம் பேசுகிறார்.

நமது வாழ்வில் நாம் செய்யும் ஒரு விடயம் மிக விரைவாகவும், தயக்கமின்றி யும் தோல்வியை ஏற்றுக்கொள்வதுதான். ஏனெனில் தோற்றுப் போவதென்பது ஒரு விடயம். தோல்வியை ஏற்றுக்கொள்வ தென்பது இன்னொரு விடயம். ஆகவே தோற்றுப் போதல் நடைபெறத்தான் போகி றது. உங்கள் வாழ்வில் தோற்றுப் போதல் எவ்வித கருத்தையும் தராத காலமொன்று இருந்தது. அதை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அது சாதாரணமான விடயமாக இருந்தது. எப்போது நீங்கள் நடக்கக் கற்றுக் கொண்டீர்களோ அப்போது இந்த ஏற்றுக்கொள்தல் உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தது. அக்காலத்தில் மொழி பெரிதாகப் பொருட்படுத்தப்படவில்லை.

ஆகவே எவரும் இதை உங்களுக்குப் போதனை செய்யவில்லை. எவருமே இதுபற்றி உங்களுக்குச் சொற்பொழி வாற்றவில்லை. உங்களுக்குத் தெரியுமா _ நீங்கள் வெளியே சென்று சமய நூல்களை வாசிக்கவில்லை. ஆனால் நடப்பதற்கான உந்துதல் உங்களுக்கு இருந்தது. அத்துடன் இது உங்கள் உள்ளே இருந்துதான் தோன்றியது, அத்துடன் அது தொடர்பாக எவ்விதமான கேள்விக்கும் இடமே இருக்கவில்லை. நீங்கள் நடக்க விரும்பினீர்கள். ஆனால் நடப்பதற்குத் தேவையான எதுவுமே அங்கிருக்கவில்லை. உங்களிடம் இரு கால்கள் இருந்தன. ஆனால் அந்தக் கால்களில் இருந்த தசை நார்கள் உங்களை காவுவதற்குப் போதுமானளவு வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. உங்களுக்கு சமநிலையை உணர வேண்டிய தேவை இருந்தது. ஆனால் நீங்கள் உண்மையாகவே அதைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. ஒரு நாள் நீங்கள் எழுந்து நிற்பதற்காக முயற்சி செய்தீர்கள். அத்துடன் என்ன நடைபெறப் போகின்றது என்பதை உங்களிடம் யாராவது கூறியிருக்கலாம்.

இது நடைபெறப் போகும் விடயமல்ல. நீங்கள் விழுந்துவிடப் போகிறீர்கள், நீங்கள் விழுந்தீர்கள். நீங்கள் தோல்வி யைத் தழுவினீர்கள். நீங்கள் உண்மை யாகவே தோல்வி அடைந்தீர்கள். ஏனெனில் ஆரம்பத்தில், முதலாவதாக எழுந்து நின்றது மட்டுமே. ஆனால் நீங்கள் தொடர்ந்து போய்க் கொண்டே இருந்தீர் கள். அத்துடன் நீங்கள் தோற்றுப் போயி ருக்கலாம். இறுதியில் உண்மையிலேயே எழுந்து நிற்கக்கூடியதொரு நிலையை நீங்கள் அடைந்தீர்கள். நீங்கள் எழுந்து நின்றதும் அங்கே தோல்விகள் இருக்கத் தான் போகின்றன. நீங்கள் மீண்டும் தோல்வியடையப் போகின்றீர்கள். ஏனெனில் இப்போது சமநிலை தொடர்பான தேவைகள் எல்லாம் ஆரம்பிக்கின்றன. அத்துடன் நிலையாக நிற்றல். அத்துடன் உங்கள் நரம்புகள் உங்கள் தசைநார் களிடம் “இதை மீண்டும் செய்..” என கூறிக்கொண்டே இருக்கின்றன. ஏனெனில் எல்லாமே தேவைக்கதிகமானதோ அல்லது தேவைக்குக் குறைவான செயற்பாடுகள் தான். இவை எதுவுமே எதற்கும் உபயோகப்படவில்லை _ நீங்கள் தோல்வி யடைவது திண்ணம்.

ஆனால் நீங்கள் தோற்றுப் போகவில்லை. ஏனெனில் ஒருபோதும் நீங்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் நீங்கள் அந்த சிறிய அடியை எடுத்து வைத்தீர்கள். பூம் என்னும் சத்தம் கேட்டது! நீங்கள் தோற்றுப் போய் விட்டீர்கள். சிலசமயங்களில் குழந்தைகள் தாயை நான் அழவேண்டுமா? என்பது போல் பார்ப்பார்கள். அப்போது தாயானவள் அதைப்பற்றிப் பரவாயில்லை, இது எப்படியெனில் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி அவர்களைத் தேற்றுவார்கள்.

அத்துடன் நீங்கள் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டு, தோற்றுக்கொண்டு, தோற்றுக் கொண்டே இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் தோல்வியை ஏற்றுக் கொள்ளாததனால், ஒருநாள் நீங்கள் சாதிக்கமுடியாத காரியமொன்றைச் செய்தீர்கள், நீங்கள் அந்த அடியை எடுத்து வைத்தீர்கள். அதன் பின்னர் அடுத்த அடியையும் எடுத்து வைத்தீர்கள். அத்துடன் திடீர் என மிகவும் அற்புதமானதொரு உருமாற்றம் ஏற்பட்டது. அத்துடன் நீங்கள் சாதித்தது நடப்பதை மட்டுமல்ல. நீங்கள் முழு உலகத்தையுமே உங்களுக்காக திறந்துள்ளீர்கள். இப்பொழுது நீங்கள் எங்கு செல்ல விரும்புகிறீர்களோ அங்கெல்லாம் நடந்து செல்லாம். நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள்.

ஆகவே “தோற்றுப் போதலும் தோல்வியும்” இரண்டு வித்தியாசமான விடயங்களைக் குறிக்கின்றன. அதன்பின் நீங்கள் வளர்ந்து வந்தபோது இரு விடயங்களையும் தொடர்புபடுத்தினீர்கள்: அந்த இரண்டையும் இணைத்தீர்கள். “தோற்றுப் போதல்” எப்பொழுதுமே வேதனையானது. - மதிப்பைக் குறைப்பதுடன் வேதனையானதும் கூட. அத்துடன் உங்கள் முழு வாழ்நாளிலும், உங்கள் சக்தியானது “தோற்றுப் போகாமல்” குறியாக உள்ளது. ஆகவே உங்கள் வாழ்வில் தோல்வி ஏற்படாது இருக்க வேண்டுமானால் நீங்கள் மனிதனாக இருக்கமுடியாது. இது சாத்தியமானதொன்றல்ல. நீங்கள் ஒரு மனிதன். ஆனால் இந்தச் சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு வழியொன்று உள்ளது. அந்த வழி என்னவெனில் “தோல்வியையும் தோற்றுப்போவதையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தாதீர்கள்.”